
இதழ்-10
01.10.2020
துமி
பல்கலை மின்னிதழ்
பாடும் நிலா
நான் கற்பிணியா?
காக்காய் வலிப்பு
பெருவெள்ளத்திற்கான பயணம்






# எல்லோரும் கொண்டாடுங்கள்!!!

சர்வதேச ரீதியில் சிறுவர் தினம் மற்றும் முதியோர் தினம் ஒக்டோபர்-01 அன்று அனுஷ்டிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கிடையே புரிந்துணர்வையும் பொது நிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதை நோக்காக கோண்டு 14.12.1954 அன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனைக்கு அமைய உலக சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று தொடங்கி இன்று வரை உலகம் முழுவதிலும் ஒக்டோபர்-01 அன்று சிறுவர்களுக்குரிய தினமாக கொண்டாடப்படுகிறது.

இன்றைய சிறுவர்கள் எதிர்கால உலகின் அடித்தளமாவர். அவர்களது எதிர்காலத்தை திட்டமிட்டு நெறிப்படுத்தி சமுதாயத்திற்கு பலன் தரக்கூடியவர்களாக மாற்றியமைப்பது வளர்ந்தோர் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

சிறுவர்களோடு முதியோர் கொண்ட இணைப்பால் முதியோர் தினமும் ஒக்டோபர்-01 அன்றே சர்வதேசரீதியாக அனுஷ்டிக்கப்படுகிறது. 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவே இந்தத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

முதியோர்களும் தமது காலத்தில் குழந்தைகள் சிறுவர்கள் போல் உள்ளதாலோ என்னவோ இந்த இரு தினங்களும் ஒரே நாளில் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்மகத்தான பெறுமதியான நாளில் துமி மின்னிதழும் தனது பயணத்தில் ஒரு மைல்கல்லை எட்டி தொடுவது துமி மின்னிதழை பெறுமதியாக்கின்றது. சிறுவர்களுக்கும், முதியோருக்கும் இடைப்பட்ட இளையோர்களால் சமைக்கப்படும் துமி மின்னிதழ், முதியோரின் நெகிழ்ச்சியான ஆசிர்வாதங்களாலும், சிறுவர்களின் ஆர்வத்தாலும் 10வது இதழை இணையப்பரப்பில் இணைத்து விடுகிறது.



இவ்விதழில்

# துமித்தவை...


04 பாடும் நிலா

07 சீதனம் வழங்குவதற்கான கட்டுப்பாடு

09 சிங்ககிரித்தலைவன்

11 விதி முடிக்கும் வீதி விபத்துக்கள்

13 குறுக்கெழுத்துப்போட்டி

14 காக்காய் வலிப்பு

16 நான் கர்ப்பிணியா?

19 திரைத்தமிழ்-சீறு

22 சித்திராங்கதா

25 ஆங்கிலம் அவசியம்

27 ஆதரவு

32 பெண்களே நூலகம் கண்களே புத்தகம்

35 வழுக்கியாறு - ஆய்வுத்தொடர்

37 குடாநாட்டின் சுற்றுலா - ஆய்வுத்தொடர்

39 என் இதயம் எழுதும் சொல்

41 யுவராஜ் எனும் யுகவீரன்



துமி
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06
https://thumi-org.github.io




நா.வினோத்

எஸ். பி. பாலசுப்ரமணியம் அவர்கள் ஒரு இந்திய திரைப்பட பின்னணிப் பாடகர். ஆறு முறை சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதினைப் பெற்றவர். SPB என சுருக்கமாக அழைக்கப்படும் இவர் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார் !!

## பிள்ளை நிலா

ஸ்ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்ரமணியம் என்ற எஸ். பி. பாலசுப்ரமணியம் அவர்கள் அப்போதைய மெட்ராஸ் மாகாணத்தில் (தற்போது ஆந்திரப் பிரதேசம்) உள்ள நெல்லூர் மாவட்டத்தில் எஸ். பி சம்பமூர்த்தி மற்றும் சகுந்தலம்மா தம்பதியருக்கு மகனாக பிறந்தவர். இவருடைய தந்தை எஸ். பி. சம்பமூர்த்தி ஒரு ஹரிஹத கலைஞர். இவருக்கு உடன் பிறந்தவர்கள் என இரண்டு சகோதரர்கள் மற்றும் ஐந்து சகோதரிகள் இருக்கின்றனர்.

இளம் வயதிலேயே இசையில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த எஸ்.பி.பி தனது தந்தையிடம் பல இசை கருவிகளை வாசிக்க கற்றுக் கொண்டார். பாடகனாக வேண்டும் என்ற ஆசையுடன் இருந்த இவர், தந்தையின் ஆசைப்படி ஜே.என்.டி.யு பொறியியல் கல்லூரியில், பொறியியல் படிக்க ஆரம்பித்தார். டைபாயிடு காய்ச்சலால் பாதிக்கப் பட்ட எஸ்.பி.பி சிறிது காலம் வீட்டில் இருந்து விட்டு பின்னர், சென்னையில் உள்ள வேறொரு கல்லூரியில் சேர்ந்து படித்தார்.

## இசை ஆர்வம்

கல்லூரியில் படிக்கும் போதே பல இசை போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்ற எஸ். பி. பாலசுப்பிரமணியம், 1964 ஆம் ஆண்டு அமெட்டூர் பாடகர்கள் ஏற்பாடு செய்திருந்த சென்னை மையமாக கொண்ட தெலுங்கு கலாச்சார நிறுவனம் நடத்திய இசை நிகழ்ச்சியில் முதல் பரிசு பெற்றார். இது அவரின் பாடல் ஆர்வத்தை மேலும் தூண்டி பின்னணிப் பாடகராக வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்தது. மேலும் கோதண்டபானி மற்றும் கண்டசாலா நடுவராக இருந்து பங்குபெற்ற ஒரு பாட்டுப்போட்டியில் சிறந்த பாடகராக தேர்ந்தெடுக்கப்பட்டார் எஸ்.பி.பி. அடிக்கடி இசையமைப்பாளர்களை சந்தித்து பாட வாய்ப்பு கேட்டுக் கொண்டிருந்த எஸ்.பி.பி அவர்கள் 1966 ஆம் ஆண்டு எஸ். பி. கோதண்டபானி இசையமைத்த தெலுங்கு திரைப்படம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மரியாத ரமணா படத்தில் தனது முதல் பாடலைப் பாடினார். தொடர்ந்து கன்னடப் படங்களுக்கு பாடல்கள் பாடிய எஸ்.பி.பி தமிழில் முதன்

**ஆறு முறை சிறந்த பின்னணிப் பாடகருக்கான தேசிய விருதினைப் பெற்ற எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்கள் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.**



முதலில் பாடியது 1969 ஆம் ஆண்டு ஜெமினிகணேசனின் "சாந்தி நிலையம்" படத்தில் "இயற்கையென்னும் இளையகன்னி" என்ற பாடல் தான். ஆனால் எம்.ஜி.ஆர் நடித்த அடிமைப் பெண் படத்தில் இவர் பாடிய ஆயிரம் நிலவே வா என்ற பாடல் அதற்கு முன்பே வெளிவந்துவிட்டது.

### பாடும் நிலா

எஸ். பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் 1968 மற்றும் 1969 ஆம் ஆண்டுகளில் எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி மற்றும் ஜெய் சங்கர் படங்களில் சுசீலா, எல்.ஆர்.ஈஸ்வரி, வாணி ஜெயராம் மற்றும் ஜானகி ஆகியோருடன் இணைந்து எம்.எஸ்.விஸ்வநாதன் இசையில் பல பாடல்களைப் பாடியுள்ளார். 1970களின் இறுதியில் தான் இளையராஜா, எஸ்.பி.பி மற்றும் ஜானகி ஆகிய மூவரும் இணைந்த வெற்றிக் கூட்டணியானது உருவானது.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்திய படம் கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட "சங்கராபரணம்" என்ற திரைப்படம். 1980 ஆம் ஆண்டு வெளியான முழுக்க முழுக்க இசையை அடிப்படையாக கொண்ட இந்த தெலுங்கு படத்தில் இடம்பெற்ற 10 பாடல்களில் 9 பாடல்களை எஸ்.பி.பி தான் பாடினார். கர்நாடக சங்கீதத்தை முறையாக கற்காத போதும் மிக சிறப்பாக இவர் இந்த படத்தில் பாடியிருந்தது இவருக்கு புகழைச் சேர்த்தது.

கன்னட மொழி இசையமைப்பாளர் உபேந்திர குமாருக்காக 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி 8 ஆம் தேதி பெங்களூரில் உள்ள ரெக்கார்டிங் தியேட்டரில் காலை 9 மணியில் இருந்து இரவு 9 மணி வரை ஒரே நாளில் 21 பாடல்களை பாடி சாதனை செய்துள்ளார். மேலும் தமிழ் மொழியில் ஒரேநாளில் 19 பாடல்களையும் , இந்தி மொழியில் 6மணி நேரத்தில் 16 பாடல்களையும் பாடி சாதனை படைத்துள்ளார்.



விளைவு, இந்த படத்திற்காக எஸ்.பி.பி க்கு சிறந்த பாடகருக்கான முதல் தேசிய விருது கிடைத்தது.

### தலைமுறை கடந்த தலைமகன்

எஸ். பி. பாலசுப்பிரமணியம் அவர்கள், எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, தேவா, வித்யாசாகர், எம். எம். கீரவாணி, எஸ்.ஏ.ராஜ்குமார்,ஏ.ஆர்.ரகுமான், யுவன் சங்கர்ராஜா, கார்த்திக் ராஜா, ஆதித்யன், ஹாரிஸ் ஜெயராஜ், டி.இமான், ஜி.வி.பிரகாஷ்குமார், அனிருத் என பல தலைமுறை இசையமைப்பாளர்களுக்கும் பாடல்கள் பாடியுள்ளார். அதே போல எம். ஜி. ஆர்., சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் முதல் ரஜினி, கமல், விஜய், அஜித் என பல நடிகர்களுக்கு பாடல்கள் பாடியுள்ளார்.

### இசையே மொழி

1989 ஆம் ஆண்டில் எஸ்.பி.பி பாலிவுட்டுக்கு சென்று இந்தி பாடல்களை பாட ஆரம்பித்தார். குறிப்பாக நடிகர் சல்மான்கானுக்கு பாடிய பாடல்கள் பெரும் வரவேற்பை பெற்றதோடு "தில் தீவானா" என்ற பாடல் சிறந்த பின்னணிப் பாடகருக்கான பிலிம்பேர் விருதினையும் இவருக்கு வாங்கி கொடுத்தது.

இதுவரை சுமார் 42,000 பாடங்களுக்கு மேல் பாடியுள்ள இவர், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, பெங்காலி, ஒரியா, துளு, படகா, மராட்டி என பல மொழிகளில் எந்த தவறும் இல்லாமல் பாடல்கள் பாடும் திறன் கொண்டவர்.

### சகலகலாவல்லவன்

எஸ். பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் பாடகர் மட்டுமின்றி பின்னணி குரல், நடிப்பு, இசையமைப்பாளர் ஆகிய துறைகளிலும் கால் பதித்துள்ளார். பல்வேறு மொழிப்படங்களில், பல நடிகர்களுக்கு பின்னணிக்குரல் கொடுத்துள்ளார். இவர் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவருக்கான நந்தி விருதினை, “அன்னமயா” மற்றும் “ஸ்ரீ சாய் மகிமா” போன்ற திரைப்படங்களுக்காக பெற்றுள்ளார்.

அதே போல் இவர் மதங்களை கடந்து பல பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார். நடிப்பை பொறுத்தவரை எஸ். பி.



பாலசுப்பிரமணியம் அவர்கள் தென்னிந்திய மொழிகளில் எழுபதுக்கும் அதிகமான திரைப்படங்களில் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி இந்நான்கு மொழிகளில் நாற்பத்தைந்து திரைப்படத்திற்கு மேல் இசையமைத்துள்ளார்.

### விருதுகளின் நிலா

1983 ஆம் ஆண்டு வெளிவந்த சகார சங்கமம், 1988 ஆம் ஆண்டு வெளிவந்த “ருத்ரவீணா” போன்ற படங்களில் பாடியதற்காக எஸ்.பி.பிக்கு இந்திய தேசிய விருது கிடைத்தது.

1981 ஆம் ஆண்டு தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றிருக்கிறார்.

1996 ம் ஆண்டு வெளிவந்த மின்சார கனவு திரைப்படத்தில் இடம்பெற்ற “தங்கத் தாமரை மகளே” பாடலுக்காக தேசிய விருதை பெற்றுள்ளார்.



இந்திய அரசு எஸ்.பி.பி அவர்களுக்கு 2001 ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருதும் 2011 ஆம் ஆண்டு பத்மபூஷன் விருதும் வழங்கியது.

ஆந்திர அரசின் நந்தி விருதினை 25 முறையும் பெற்ற எஸ்.பி.பி 2015 ஆம் ஆண்டுக்கான கேரள அரசின் “ஹரிவராசனம்” விருதையும் பெற்றுள்ளார்.

இவருக்கு 2016 ஆம் ஆண்டு 47வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் இந்திய திரைப்பட பிரமுகர் விருது வழங்கப்பட்டது.

இவ்வாறு பல மனங்களில் இசை மழையாக இருந்த பாலசுப்பிரமணியம் அவர்கள் கொரோனா வைரஸ் காரணமாக வைத்திய சாலையில் பல நாட்களாக இருந்தார். இவரது உடல் நிலை மிகவும் மோசமானதன் காரணமாக 2020/09/25 அன்று இவ்வுலகை விட்டு பிரிந்தார். இவரது இழப்பு பல மனங்களை இன்றும் கண்ணீர் சொறியவே செய்கிறது.



## சீதனம் வழங்குவதற்கான கடப்பாடு




அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி

தந்தையினது சொத்துக்கள் ஆண் பிள்ளைகளுக்கும் தாயினது சொத்துக்கள் பெண் பிள்ளைகளுக்கும் சென்றடையும் என்ற பண்டைய நிலையானது மாற்றம் பெற்று தற்காலத்தில் பெற்றோர்கள் பெண் பிள்ளைக்கு சீதனமாக எந்தவொரு சொத்தையும் வழங்க முடியும்.

பெண் பிள்ளையிற்கான சீதனமானது முதுசம் தாயினது சீதனம் மற்றும் தேடிய தேட்டத்திலிருந்து வழங்கப்படலாம்.

திருமணமானது நிலையாக உள்ள போது தந்தை தனக்குச் சொந்தமான முதுசம் அல்லது தனது வாழ்க்கைத் துணையினது தனிப்பட்ட சொத்தாகிய சீதனம் அல்லது திருமணம் நிலையாக உள்ளபோது உழைத்து சேர்த்த சொத்துக்கள் என்று கூறப்படுகின்ற "தேடிய தேட்டத்திலிருந்து" சீதனம் வழங்கும் அதிகாரம் தந்தைக்கு உண்டு.

மனைவி இறந்த பின்னர் கணவன் ஆனவன் மனைவியினுடைய தனிப்பட்ட சொத்தாகிய சீதனத்தில் இருந்து மகளுடைய திருமணத்தின் போது அந்த மகளிற்கு சீதனம் வழங்க முடியுமா? என்ற கேள்விக்கு நாகரத்தினம் எதிர் அழகரட்னம் வழக்கிலே மனைவி இறந்த பின்னர் கூட மனைவியின் சீதன சொத்தினை கணவன் சீதனமாக பெண் பிள்ளைக்கு வழங்கப்பட முடியும் என்று தீர்க்கப்பட்டது.

இங்கே எவ்வளவு பாகம் இறந்த மனைவியினுடைய சீதனத்தில் இருந்து வழங்கப்பட வேண்டும் என்பதனை கணவன் தீர்மானிக்க முடியும்!

இங்கு மனைவி இறந்த பின்னர் கணவன் ஆனவன் முதுசம், இறந்த மனைவியினுடைய சீதனம் மற்றும் தேடிய தேட்டத்திலிருந்து பெண் பிள்ளைக்கு சீதனம் வழங்கப்பட முடியும் என்று அறிய முடிகிறது.

இதேபோன்று கணவன் இறந்த பின்னர் மனைவி இறந்த கணவனினுடைய முதுசம் தனக்கு வழங்கப்பட்ட சீதனம் மற்றும் தேடிய தேட்டம் ஆகிய சொத்துக்களிலிருந்து தன் பிள்ளைக்கு சீதனம் வழங்கப்பட முடியும் எனவும் சட்டம் ஏற்பாடு செய்கின்றது.

சட்ட நியதிகளின் படி பிள்ளைகள் சிறுபராயம் ஆக உள்ளபோது தந்தையானவர் இறப்பின் தாயானவர் அந்தப் பிள்ளைகளை வளர்த்து கொண்டு காணப்படுகின்ற சொத்துக்கள் முழுவதையும் ஆண்டு வரமுடியும்.

பின்னர் பெண் பிள்ளைகள் பருவம் அடைந்து திருமணம் அடையும் காலம் வந்ததும் தாயானவர் அந்தச் சொத்துக்களிலிருந்து சீதனம் கொடுக்க கடமைப்பட்டவர் ஆவர்.

**ஆகவே தாயின் இறப்பின் பின்னர் தந்தை கொண்டுள்ள அதிகாரத்தை தந்தை இறப்பின் பின்னர் தாய் பிரயோகிக்க முடியும்.**

சட்ட நியதிகளின் படி தாயானவர் பிள்ளைகளை விட்டு முன்பதாக இறப்பாராயின் தந்தை மறு திருமணம் செய்யும் காலம் வரை அனைத்துச் சொத்துக்களையும் ஆண்டு வர முடியும்.

**அவ்வாறு தந்தை மறு திருமணம் செய்வாராயின் அந்தப் பிள்ளைகள் தாய்வழி உறவினரால் பொறுப்பேற்கப்படலாம்.**

அவ்வாறு எவரேனும் பிள்ளைகளின் பொறுப்பை ஏற்கும் பட்சத்தில் உறவினர்களிடம் இறந்த தாயின் சீதனம் முழுவதையும் தேடிய தேட்டத்தின் அரைவாசியையும் கொடுக்க கணவன் கடப்பாடு கொண்டவர் ஆவார்.

மேலும் பெண் பிள்ளைகள் பராயமடைந்து திருமணம் செய்யும் வேளையில் ஏற்கனவே குறிப்பிட்டது போல இறந்த மனைவியினுடைய சீதனம் தேடிய தேட்டத்தின் அரைப்பங்கு மற்றும் தனது முதுசத்தில் இருந்து பெண் பிள்ளைக்கு சீதனம் வழங்க வேண்டும்.

**அவ்வாறு சீதனம் பெண் பிள்ளைக்கு வழங்கிய பின்னர் இறந்த மனைவியின் சீதனம் மற்றும் தேடிய தேட்டத்தின் அரைவாசியில் ஏதேனும் மிகுதியாக காணப்படின் அப்பாகமே ஆண் பிள்ளைகளுக்கு சென்றடைய முடியும்.**

'தம்பாப்பிள்ளை எதிர் சின்னத்தம்பி' வழக்கிலேயே ஒரு பெற்றோர் இறப்பின் பிள்ளைகள் அப்போதே இறந்த பெற்றோரின் சொத்துக்களை வழியுரிமையின் மூலம் பெறுகின்றனர் என தீர்க்கப்பட்டது. எனவே உயிர் வாழ்கின்ற மற்றைய பெற்றோர் வழியுரிமை மூலம் பெண்பிள்ளை பெற்றுக் கொண்ட பங்கினை விட மேலதிகமாக இறந்தவரின் அதிலிருந்து கொடுக்கப்பட முடியாது என்ற வாதம் ஆராயப்பட்டது.

அதாவது சட்டத்தின் செயற்பாட்டினால் வழியுரிமையினால் ஏற்கனவே மற்றைய பிள்ளைகளுக்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்களை உயிர்வாழும் பெற்றோர் எடுக்க முடியாது என்பதாகும்.
ஆன போதும் இவ்வழக்கில் நீதியரசர் இது தேசவழமை ஏற்பாடுகளை வலியுறுத்துகின்ற கோட்பாடுகளின் தவறான விளக்கமாகும் என்பதுடன் அக்கோட்பாடுகள் கூட்டுக் குடும்ப பின்னணியில் அமைந்துள்ளதாக குறிப்பிடுகின்றார்.

மேலும் முழுமையான சொத்துக்களினுடைய நிர்வாகம் அத்தகைய பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருப்பதுடன், அப்பெற்றோர் தமது தற்துணிவில் தாம் சரியானது எனக் கருதுகின்றவாறாக சீதனம் தொடர்பில் பெண் பிள்ளைகளுக்கு இறந்த பெற்றோரின் சொத்துக்களின் அத்தகைய பாகங்களை பிரித்து ஒதுக்குவதற்குமான அதிகாரத்தை அல்லது தத்துவங்களை கொண்டுள்ளனர்.

மேலும் இறந்த பெற்றோரின் எஞ்சிய சொத்துக்கள் ஏதேனும் இருப்பின் ஆண் பிள்ளைகள் வளர்ந்து அவற்றை நிர்வகிக்க கூடிய நிலை வரும் வரை உயிர் வாழும் பெற்றோர் உடைமை கொண்டிருக்கலாம். உயிர்வாழும் பெற்றோர் தந்தையாக உள்ள இடத்தில் தந்தை தன் பிள்ளைக்கு சீதனம் வழங்கும் போது இறந்த தாயின் சீதனச் சொத்து தேடிய தேட்ட சொத்து மற்றும் முதுசத்திலிருந்து சீதனம் வழங்கலாம்.

இறந்த தாயின் சொத்தில் எஞ்சிய பாகம் ஏதேனும் இருப்பின் ஆண்பிள்ளை தகுதியான வயது வந்து நிர்வகிக்க இயலுமாக உள்ளவரை தந்தை உடைமை கொண்டிருக்க முடியும்.



அதன் பின்னர் ஆண் பிள்ளைகள் திருமணம் செய்யும் வரை பிரிக்காமல் அச் சொத்துக்களை எடுத்து உடைமை கொள்ளலாம்.

**இறந்த தாயினுடைய சொத்துக்களில் எதுவுமே எஞ்சி இருக்காது விடின் ஆண்பிள்ளைகள் தந்தை இறக்கும் வரை எதனையும் கோர முடியாது.**

*சாரல் தூறும்.....................!!!*

ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 10

வடக்கே இருந்து வந்த ஒரு பேய்க்காற்று அனுராதபுரத்தை மூர்க்கமாக முத்தமிட்டுச் சென்றது! நண்பகல் தாண்டியிருந்தாலும் மழை இருளில் நகரமே மூடிக்கிடந்தது! பலத்த மழையொன்றை மக்கள் தத்தம் வீடுகளில் முடங்கியபடி எதிர்பார்த்திருந்தனர். நகரத்தைத் தாண்டியோடும் கிளை நதியொன்று தெற்கே போய் காட்டாறு ஒன்றுடன் கலந்து ஓடியது.

அந்தக் காட்டாற்றின் மறுகரைக்கு அப்பால் எங்களுக்கு ஏற்கனவே அறிமுகமான அந்தக்கறுத்தப் புரவியை இழுத்துக்கொண்டு தளபதி மீகாரன் தனது புரவியில் வந்துகொண்டிருந்தான். ஏற்கனவே அவனது கட்டளைக்கு ஏற்ப ஆற்றங்கரையில் காத்திருந்த வீரர்கள் இந்தக்காட்சியை கண்டு கொலைகாரனைத் தம் தளபதி கொன்றிருக்க வேண்டும் என்று தமக்குள் பேசிக்கொண்டனர்!

"வீரர்களே... கொலைகாரன் தப்பிவிட்டான்! அனால் அவன் குதிரையும் ரகசிய ஓலையும் என்னிடம் சிக்கின...
இந்தக் குதிரையையும், இதோ இந்தப் பையில் இருக்கும் ஓலையையும் அரண்மனைக்கு விரைவாக எடுத்துச்செல்லுங்கள்! காட்டுக்குள் தப்பிப்போன கொலைகாரனின் தலையைக் கொண்டு தான் அரண்மனைக்கு நான் வருவேன் என்று மன்னரிடம் சொல்லுங்கள்!!"

வீரர்கள் குழப்பமடைந்தவர்களாய், தளபதியிடம் இருந்து குதிரையையும் ஓலையையும் பெற்றுக்கொண்ட வேகத்தில் அரண்மனையை நோக்கி தம் குதிரைகளில் விரைந்தனர்!

வீரர்கள் சென்று அப்பால் மறைந்ததும் மீகாரன் தான் வந்த வழியில் தன் குதிரையைத் திருப்பிக்கொண்டு போனான். அந்தக் காட்டாறு ஒரு குதிரை நடந்து கடக்க கூடிய நீரைக்கொண்டிருந்தது. மீக்காரனின் குதிரையும் வெகுநாட்கள் பழக்கப்பட்டதைப் போன்று மிக லாவகமாக ஆற்றைக் கடந்து அப்பாலே போனது!

அந்தக்காடு மழைமேகங்களின் அரவணைப்பில் குளிர்ந்து விறைத்துப் போய் கிடந்தது! சில குரங்குகள் மட்டும் ஒரு பாறையின் மேல் அமர்ந்து வானத்தைப் பார்ப்பதும், தமக்குள்ளே சேட்டைகள் செய்வதுமாக இருந்தன. திடீரென வாள்களும் கேடையங்களும் மோதும் ஓசை கேட்டது! குரங்குகளெல்லாம் கீச்சிட்டபடி மரங்கள் மீது தாவி ஓடி ஒளிந்து கொண்டன..

மறுபடியும் பிறதேசத்தவர் படையெடுப்பா? அப்படியானால் யுத்தம் நகரத்தில் தானே நடக்க வேண்டும்? யாருமற்ற இந்த வனத்தில் யார் யாருடன் மோதுவது?
ஆறுபாண்டியர்களின் ஆட்சிக்கு பிறகு தன் மாமன் மகாநாமரின் துணையோடு பல தோல்விகளைத் தாண்டி இராசரட்டையை ஆண்ட திரிதரனை கொன்று தாதுசேனன் இந்த நாட்டின் மன்னனானான்!

அப்போதெல்லாம் அடிக்கடி யுத்தங்கள் நடக்கும்! திடீரென ருகுணையில் இருந்து தன் படையோடு தாதுசேனன் இராசரட்டைக்குள் புகுந்து கிளர்ச்சி செய்வான்! பாண்டியர்களின் வீரர்கள் கிளர்ச்சிக்காரர்களை விரட்டியடிப்பார்கள்! ருகுணைக்குத் தன் எஞ்சிய வீரர்களுடன் தப்பி ஓடி மறைந்துகொள்வான் தாதுசேனன்! பிறகு மீண்டும் படை திரட்டி போருக்கு போவான்! இப்படியாகத்தான், கி.பி 436 இல் மித்சேனன் பாண்டியர்களிடம் இழந்த நாட்டை தாதுசேனன் கடும் முயற்சியின் பயனாக மீட்டெடுத்தான்!

ஆனால் இப்போது போர் இல்லை! ஆனால் போர் வீரர்கள் பயிற்சி செய்கின்றனர்! எப்படி



விசாரித்தார்! இளவரசரின் தகவல் ஏதும் உண்டா?"

"தளபதியாரே, இளவரசர் நலமாகவே உள்ளார்! வரும் பௌர்ணமி அன்று காலை தன்னைச் சந்திக்கச் சொன்னார்! பழைய திட்டம் தான் போலுள்ளது..."

தாதுசேனன் பாண்டியரிடம் இருந்து நாட்டை மீட்க ருகுணையில் தன் வீரர்களுக்கு பயிற்சி கொடுத்தானோ அதேபோல் தாதுசேனனின் ஆட்சியைக் கவிழ்க்க காசியப்பன் தன் வீரர்களுக்கு பயிற்சி கொடுக்கின்றான்! காட்டாற்றின் மறுகரையில் அமைக்கப்பட்ட இரகசியப் பாசறைகளில் இந்தப் பயிற்சி காசியப்பனின் மைத்துனனும் நாட்டின் தளபதியுமான மீகாரனின் மேற்பார்வையில் கொடுக்கப்படுகிறது!

சதுர வடிவில் அமைக்கப்பட்டிருந்த கூடாரத்துள் மீகாரன் மூங்கில் ஆசனத்தில் அமர்ந்திருந்தான்! அவன் அருகில் அனுராதபுரத்து மந்திரிகளின் ஒருவரான கலிங்கபண்டா அமர்ந்திருந்தார்.

"தளபதியாரே, நாம் நினைத்தபடி எல்லாம் நடப்பதையெண்ணி மகிழ்கின்றேன்! இளவல் காசியப்பனிடம் இருந்து ஏதும் தகவல் வந்ததா?" என்று கலிங்கபண்டா கேட்டு முடிப்பதற்குள், கூடாரத்துக்குள் அபயராஜன் நுழைந்து வணங்கி நின்றான்!

"வா... அபயா...வா... அமர்ந்துகொள்! சரியான சமையத்தில் தான் வந்திருக்கின்றாய்! இளவரசருக்கு மிகவும் பிடித்த, அவர் நம்பிக்கைக்கு பாத்திரமான உன் வரவால் நான் மகிழ்கின்றேன்! இப்போது தான் கலிங்கபண்டா அவர்கள் இளவரசரைப் பற்றி

"ஆம்... அபயா... உனக்கு தெரியாததா...? உரிய நேரத்தில் நீ உன் கடமைகளைச் செய்து முடி! பண்டா அவர்களே... இந்நேரம் ஓலை மன்னரின் கையில் சேர்ந்திருக்கும் தானே?" என்றவாறு, நீண்ட நாள் பகையை முடிக்கப்போகும் மகிழ்ச்சியில் மிகப்பலமாகச் சிரித்தான் மீகாரன்! பண்டாவும் அபயனும் அந்தச் சிரிப்பில் பங்கெடுத்துக் கொண்டனர்!

அந்தச் சிரிப்பின் சத்தம் அரண்மனை வரைக்கேட்டதோ... என்னவோ... அரண்மனை மாடத்தில் இருந்த புறாக்கள் சடசடவெனப் பறந்து போயின! முகலன் மீகாரன் வீரர்களிடம் கொடுத்தனுப்பிய ஓலையை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்! அவனுக்கு முன்பதாக அனுராதபுரத்தின் கைதேர்ந்த வைத்தியர்கள் எல்லோரும் தமக்குள்ள ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றனர்... முகலனின் கையில் இருந்த ஓலையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது!

**'திட்டம் வெற்றி..! விசம் தீட்டிய ஈட்டி மன்னரைக்காயப்படுத்தியது... உடல் ஊனமாகும்... இல்லையேல் உயிர் பிரியும்!'**

**துரோகம் தொடரும் ...**



# விதி முடிக்கும் வீதி விபத்துக்கள்

க.பானுதீபன்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்

தற்காலத்தில் வீதி விபத்துக்களால் ஏற்படுகின்ற உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. முப்பதாண்டு காலமாக போரினால் மடிந்து போன உயிர்களை விட விபத்துக்களால் உயிரிழந்தோரின் எண்ணிக்கையே அதிகமானது. இதனை அண்மை காலத்து புள்ளி விபரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளை வாசிக்கும் போதும் ஊடகங்களை நுகரும் போதும் கண்களில் இருந்து நீர் கசியும்.

சிறு குழந்தை முதல் தள்ளாடும் வயோதிபர் வரை வீதி விபத்துக்களில் சிக்குவதை காணமுடிகின்றது. இலங்கையில் மாத்திரமல்ல உலகின் பல்வேறு நாடுகளிலும் வீதிப் போக்குவரத்து அதிகரித்து, வாகன விபத்துக்களும் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளன. இன்றைய காலகட்டத்தில் வாகன விபத்துக்கள் இடம்பெறாத நாளே கிடையாது என்ற துரதிர்ஷ்டகரமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அதிகரித்த வாகனங்களின் பயன்பாடுகள், வீதி ஒழுங்குகளை மதிக்காமை, வீதி ஒழுங்கு கட்டுப்பாடுகளில் போதிய இறுக்கமின்மை மற்றும் அதிகரித்த மதுப்பாவனை போன்றனவே இதற்கு பிரதானமான காரணங்களாக அமைந்துள்ளன.



வீதி விபத்துக்களில் அதிக இழப்புக்கள் ஏற்படுவது அரச மற்றும் தனியார் பேருந்துகளின் போட்டிச் சவாரியால் தான். இந்தப் போட்டிகளால் சாவடைந்த உயிர்கள் தான் எத்தனை? இருந்தாலும் இவர்களின் வீரவிளையாட்டும் வெறிகொண்ட ஓட்டமும் நின்றபாடில்லை.

மது அருந்திய நிலையில் வாகனங்களை செலுத்திச் செல்பவர்களினால் பந்தாடப்பட்டு உயிரிழந்தோர் எத்தனைபேர்? தலைகால் புரியாமல் "புஷ்பக விமானத்தில் பறப்பது போன்று" வாகனங்களைச் செலுத்திவருவதை எமது கண்கூடாகக் காணலாம்.



வாகன விபத்துக்கள் அதிகரிக்க பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்து விடுகின்றன. குறிப்பாக வீதிப்போக்குவரத்து சட்ட



ஒழுங்குகளை மதியாமை, அவற்றை மீறிச் செயற்படுதல், முன்பாக செல்லும் வாகனத்தை முந்திச் செல்ல முற்படுதல், வாகனங்களில் வானொலி, தொலைக்காட்சி என்பவற்றின் ஒலியை அளவுக்கதிகமாக உயர்த்துதல், தூக்கமின்றி இரண்டு - மூன்று நாட்கள் தொடர்ச்சியாக வாகனம் செலுத்துதல், போதைப் பொருட்களைப் பாவித்த நிலையில் வாகனம் செலுத்துதல், கையடக்க தொலைபேசியை பாவித்தல் போன்றவற்றைக் கூறலாம்.

பாதசாரிகளின் கவனயீனமும் வீதிச்சட்டங்களை மதியாது செயற்படுவதும் விபத்துக்களுக்கு காரணமாக அமைந்திருக்கின்றது. இதேபோல புகையிரதம் வரும் வேளையில் பாதுகாப்புத் தடை போடப்பட்டிருந்தாலும் அதனை கடந்து செல்லும் பழக்கம் நம்மில் பலருக்கு இருக்கிறது. இந்த கணநேர விளையாட்டால் பறிபோன உயிர்கள் எத்தனை?

விபத்துக்களால் இடம்பெறுகின்ற உயிரிழப்புக்களை விட காயங்களும் உடைமை சேதங்களும் ஏற்படவே செய்கின்றன. இவ்வாறு காயங்களுக்கு உள்ளாவோருக்கு சிகிச்சை அளிக்கவென அரசு கோடிக்கணக்கான ரூபாவை செலவிடுகின்றது. இது யாருக்கும் தெரிவதில்லை.

போக்குவரத்துகளின் போது ஏற்படுகின்ற விபத்துக்கள் காரணமாக வருடமொன்றுக்கு 13.5 இலட்சம் மக்கள் உயிரிழப்பதாகவும், அவர்களில் பெரும்பாலானோர் இளவயதினர் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூட சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் வாகனம் செலுத்துபவர்கள் பொறுப்பு மிக்கவர்களாக உருவாக வேண்டும். அல்லது உருவாக்கப்பட வேண்டும்.

## குறுக்கெழுத்துப்போட்டி – 06

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வ | 2 ண | 3 க் | 4 க | ம் | | 5 ம | |
| 6 ச | ம | ய | ம் | | 7 ள | ச | ல் |
| 8 ந் | ம் | த | கா | | | ங் | |
| த | | ம் | | 9 நா | ட | க | 10 ம் |
| 11 ம் | 12 ண | க | 13 மா | ண் | | 14 ம் | நா |
| | ண் | | லை | | 15 ம் | | த |
| 16 தி | க | தி | | | 17 க | 18 னி | |
| 19 பொ | ன் | | 20 அ | னு | தா | ப | ம் |

### பரிசுக்குரியவர்

ச. தரணியா
தரம்10
தி/சண்முகா இந்து மகளீர் கல்லூரி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | | |
| 6 | | | | 7 | | | 8 |
| 9 | | | | | 10 | 11 | |
| | | 12 | 13 | | | | |
| | | 14 | | | | 15 | 16 |
| 17 | 18 | | 19 | 20 | 21 | | |
| 22 | | | | 23 | | | |
| 24 | | | | | | | |




## இடமிருந்து வலம்

*1- தமிழர்களின் உயர்ந்த பண்பாடுகளில் ஒன்றாக கருதப்படுவது*
*6- ஒரு குறிப்பிட்ட விஷயத்தின் மீது சுவை கொள்ளுதலை இவ்வாறு அழைப்பர்.*
*7- கூரை வேயப் பயன்படுவது*
*9- அருகதை என்றும் சொல்லலாம்.*
*10- பெண்ணின் பருவ நிலைகளில் ஒன்று (திரும்பி)*
*12- அரச மகளிர் பவனி வரும் வாகனம்*
*14- பருத்தி, பட்டு போன்ற நூல்களிலிருந்து தறிக்கப்படுவது.*
*15- மகபாரத சகுனியின் கைவந்த கலை ஒன்று*
*17- நதியினைக் குறிக்கும் ஒரு சொல்*
*19- விருந்தினரை இப்படி அழைப்பர்.*
*22- தன்மையொருமைச் சொல் (திரும்பி)*
*23- மின் அல்லது வெப்பத்தைக் கடத்தக் கூடியது. (குழம்பி)*
*24- இது ஒன்றே மாறாததாம்.*

## மேலிருந்து கீழ்


*1- உணவைச் சுருக்கி அல்லது விடுத்து இறைவனை வணங்கும் முறை.*
*2- உலர்ந்து வற்றிய இலை (குழம்பி)*
*3- ஓர் எண் (குழம்பி)*
*4- பிரணவத்தின் சாரம் (தலைகீழ்)*
*5- உறங்குகின்ற இடம் (குழம்பி)*
*8- விதியை இதனால் வெல்லலாம் என்பது அறிவுடையோர் நம்பிக்கை (தலைகீழ்)*
*11- போர் முடிந்ததை அறிவிக்கும் இசைக்கருவி (குழம்பி)*
*13- சிறிய பிராணி ஒன்று (தலைகீழ்)*
*16- நிலவினைக் குறிப்பது.*
*17- இது லயப்படுகின்ற இடமே ஆலயம் எனப்படுகிறது.*
*18- பிடுங்கி நடக்கூடிய பயிர் (குழம்பி)*
*20- பஞ்சாங்கத்தில் கணிக்கப்படுவது.*

**அனுப்ப வேண்டிய.......**
**மின்னஞ்சல் முகவரி :~** thumi2016@gmail.com
**இறுதித்திகதி :~ 13.10.2020**

# மருத்துவம் போற்றுதும்

சுகமாரன் சுஜன்.
4ம் வருடம்,
கொழும்பு மருத்துவ பீடம்.

பூமியின் அடியில் உள்ள பூமித்தகடுகளிலே மாற்றங்கள் ஏற்படும் போது அந்த அதிர்வு அலைகளின் அரக்கத்தனத்தை தாங்கள் அறிந்ததுண்டா? இப்போது அதே நிலை உங்கள் மூளையிலே ஏற்பட்டால் என்னவாகும் என சிந்தியுங்கள். ஆம்! உங்கள் மூளையிலே இருக்கும் நரம்பு கலங்களுக்கு இடையிலே எப்போதும் ஓர் சிறு மின்சாரம் பாய்ந்து கொண்டே இருக்கும். அதுவே எம் மூளையை இயக்குகிறது. அந்த மின்சார அலைகளிலே மாற்றம் ஏற்பட்டு அதிகளவான மின்சார அலைகள் பாய்ந்தால் என்னவாகும் என சிந்தியுங்கள்.. அதுவே வலிப்பாய் மாறிப்போகிறது.




இப்போது நான் வலிப்பு என கூறியதும் நீங்கள் சிந்திப்பது புரிகிறது. காக்காய் வலிப்பு. உடல் உதற வேண்டும். வாயால் நுரை தள்ள வேண்டும். சுய நினைவு இழக்க வேண்டும். அப்படித்தானே நண்பர்களே? .. ஆம் என்றால் , தயவு செய்து முழுமையாக இந்த கட்டுரை உங்களிற்கு தேவை என்று அர்த்தம். ஏன் என்றால் வலிப்பு என்றாலே(seizure/fits) அது காக்காய் வலிப்பாகத்தான் (epilepsy )அமைய வேண்டும் என்பது அல்ல. கை கால்கள் அடித்து உதற வேண்டும் என்பதும் அல்ல. ஆனால் நம் சமுகம் அப்படித்தான் இதுவரை எண்ணி வருகிறது. ஒரு முறை வலிப்பு வந்தால் காக்காய் வலிப்பு வந்து விட்டது என பெயர் சுமத்தி விடுகிறது( social stigma). ஒரு உண்மை தெரியுமா? உலகில் உள்ள 100 பேரிலே 10 பேருக்கு அவர்கள் வாழ்க்கையில் ஒரு முறையேனும் வலிப்பு வரலாம். அவை எல்லாம் காக்காய் வலிப்பு என்று முடிவெடுக்க முடியாது அல்லவா..சரி! அப்படி என்றால் வலிப்பு (seizure) , காக்காய் வலிப்பு (epilepsy) இரண்டுக்கும் என்ன வேறுபாடு??????

வலிப்பு என்பதிலே பல வகை உண்டு. அதிலே பிரதானமானவை ,தூண்டப்பட்ட வலிப்பு(provoked seizure). தூண்டப்படாத வலிப்பு( unproved seizure). தூண்டப்பட்ட வலிப்பு என்பது உண்மையில் ஒரு நோய் அல்ல. அது ஓர் நோய் அறி குறியே. அதாவது இப்போது காய்ச்சல் என்பது ஒரு நோயா? இல்லை அல்லவா. உடலிலே ஏதோ ஓர் பிரச்சனை என்பதை சொல்லிக்காட்டும் ஓர் அறிகுறி(sign). அது போன்றே provoked seizure என்பது மூளையிலே ஏற்பட்டு இருக்கின்ற தற்காலிக பிரச்சனை ஒன்றிற்குரிய அறிகுறியே ஆகும்.

உதாரணமாக மூளையில் கிருமித்தொற்று ஏற்பட்டாலோ, தலைக்காயங்கள்



ஏற்பட்டாலோ, குளுக்கோசின் அளவு குறைந்தாலோ( *hypoglycemia*) , ஒட்சிசனுடைய அளவு குறந்தாலோ (*hypoxia*) , சிறுநீரக / ஈரல் செயல் இழப்பால் நச்சுத்தன்மை ஏற்பட்டாலோ, அதிகளவு மருந்து (*drugs overdose*), அல்கோலிற்கு அடிமையானவர்கள் திடீரென அல்ககோலை நிறுத்தினாலோ (*alcohol withdrawal syndrome*) .. இதுபோன்ற பல காரணங்களால் தூண்டப்பட்ட வலிப்பு ஏற்படும். எனவே இந்த பிரச்சனைகள் உடனடியாக சரி செய்யப்படின் மீண்டும் இந்த வலிப்பு ஏற்படாது. எனவே இந்த வலிப்புக்கள் நோய் அல்ல. நோய் அறிகுறிகளே.

ஆலாய் காக்காய் வலிப்பு (*epilepsy*) என்பது மூளையை பாதிக்கும் ஓர் நீண்டகால நோய் ஆகும். (*Chronic brain disorder*) . பொதுவாக இரண்டு /அதற்கு மேற்பட்ட வலிப்புக்கள் 24 மணித்தியாலைய இடைவெளிக்கு அப்பால் மீண்டும் மீண்டும் ஏற்படும் போது அது எபிலெப்சியாக கருதப்படும். 50% ஆன எபிலெப்சி ஏன் ஏற்படுகிறது என்ற காரணங்கள் இன்றும் தெரியாது. அவர்களுடைய MRI /CT ஸ்கானில் எந்தவித மாற்றங்களும் இருக்காது. இதைவிட கருவறையிலே குழந்தை இருக்கும் போது ஏற்படும் பாதிப்புக்கள், குழந்தை பிறக்கும் போது ஏற்படும் தலைக்காயங்கள்( *birth injuries*) , தலையிலே இருக்கும் கட்டிகள் , பாரிசவாதத்தின் பின்னர் மூளையிலே ஏற்பட்ட பாதிப்புக்கள் போன்ற காரணங்கள் எபிலெப்சிக்கு காரணமாகும். உலகிலே 50 மில்லியன் மக்கள் எபிலெப்சியால் பாதிக்கப்பட்டு உள்ளார்கள்.

வலிப்பு உள்ளவர்களின் உறவினர்களை ஆய்வுக்கு உட்படுத்தியதில் பரம்பரையாகவும் வலிப்பு வரலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. கர்ப்பிணிகளுக்கு ரத்தக்கொதிப்பு இருந்தால், பிரசவக் காலத்தில் வலிப்பு வருவதுண்டு. அல்சைமர் நோய், சோடியம் அளவு குறைதல் போன்ற காரணங்களால் வயதானவர்களுக்கு வலிப்பு ஏற்படக்கூடும். சிலருக்கு மன உளைச்சல் காரணமாக 'பொய் வலிப்பு' (*Pseudo seizure*) வருவதும் உண்டு. பல நேரம் எந்தக் காரணத்தையும் கண்டுபிடிக்க முடியாத வலிப்புகளே அதிகமாகக் காணப்படும்.

இன்னுமொரு வகையான வலிப்பு உள்ளது . அதை *febrile seizure* என்று சொல்வர். பொதுவாக குழந்தைகளிற்கு காய்ச்சல் ஏற்படும் போது இவ்வாறான வலிப்புக்கள் ஏற்படும். இவை 6மாதம் -5 வயது வரையான காலப்பகுதியில் ஏற்படும். காய்ச்சல் ஏற்படும் போது இந்த வலிப்புக்கள் மீண்டும் மீண்டும் ஏற்படலாம். இவைகளும் சாதாரணமான வலிப்புக்களே. எபிலெப்சி அல்ல.

எபிலெப்சி வலிப்பு ஏற்பட்டவுடன் அது எவ்வாறு தோற்றம் அளிக்கும் என்பதற்கான பலரது பதில், “”உடலின் கை கால்கள் எல்லாம் உதறி அடித்து , வாயால் நுரை தள்ளும் என்பது ஆகும்.” ஆனால் இது உன்மை அல்ல. அதாவது இந்த அறி குறி ஒருவகையான எபிலெப்சியின் அறி குறியாகும். அதாவது எபிலெப்சியில் பல வகை உண்டு. மூளையில் எந்தப்பகுதியில் இந்த மின்சாத குளப்பங்கள் ஏற்பட்டு, அது எவ்வாறு பரவிச்செல்கிறது என்பதை பொறுத்து அந்த அறிகுறிகளும் மாறும்.



**எபிலெப்சி வலிப்பின் வகைகளை உதாரணங்களுடன் அடுத்த வாரம் பார்ப்போம்.**

## தொண்டரடிப்பொடியனின் கப்பச்சினோ கதைகள்

# நான் கற்பிணியா?

நோய் என்றால் என்ன? ஆரோக்கியத்தில் ஏற்படும் குறைவு என்றார்கள். ஏற்றுக்கொள்கிறேன். ஒருத்தி தாய்மையடைகையில் ஆரோக்கியத்தில் குறைவும் அடைகிறாளா? அவள் முன்பு செய்த செயல்கள் சிலவற்றை இப்பொழுது அவளால் செய்யமுடியவில்லைத்தான். ஓட முடியவில்லை, நீண்ட தூரம் நடக்க முடியவில்லை, அவளால் நீண்ட நேரம் நிற்கக்கூட முடியவில்லை. அவ்வப்போது வயிறு வலிக்கிறது. இடைக்கிடையே இடுப்பு நோகிறது. வாந்தி வழமையாகிறது. தலைச்சுற்றல் அடிக்கடி வருகிறது. இத்தனையும் வைத்துக்கொண்டு கரு ஏற்றவளை பிணிகாரி என்று முடிவு செய்து விட்டவர்களே! இன்னொரு உயிரை எனக்குள் வளர்க்கும் அளவிற்கு வலிமை பெற்றிருக்கிறேன். சுகமான சுமைதான் என்றாலும் அந்த எடை பாரத்தை உடலாலும், பிள்ளை நல்லவாறு பிறக்க வேண்டுமென்ற மன பாரத்தை உள்ளத்தாலும் ஒன்பது மாதங்கள் தாங்கும் என்னை நோயாளி என்று சொல்வது எந்த வகையில் நியாயம்?

நோயின் விளைபொருட்கள் என்ன? காயத்தால் வடியும் சீழ் முதல் சிந்தும் மூக்குச்சளி வரை நோயினால் உடலில் இருந்து வெளியேற்றப்படுபவை யாவுமே கழிவுகளாம்! ஆக கர்ப்பமும் பிணி என்றால் விளைவுகளான நீங்கள் யாவரும் கழிவுகள் தான். ஏற்றுக்கொள்கிறீர்களா?

துணையின் ஆண்மையையும், என் பெண்மையையும், எம் பரம்பரையின் தொடர்ச்சியையும் பிரதிபலிக்க ஒரே வழி மகப்பேறு எனும் போது அது எப்படி நோயாகும்? மலட்டுத்தன்மையை நோய் என்றீர்கள்! ஆக்குவதும், அழிப்பதும் ஆண்டவன் கையில் என்றால் என்னுள் இன்னொரு உயிரை உருவாக்காதது என் நோயா? கருவுறும் வரை மலட்டுப்பிணி என்றீர்கள். கருவுற்ற பின் கர்ப்பிணி என்கிறீர்கள். பிணியை சுமந்து வாழ்வதே என் பணியாகி விட்டதா?

அங்கே இன்னொரு கூட்டம் என்னை இன்னொரு விதத்தில் சீண்டிப்பார்க்கிறது. எல்லா விலங்குகளுக்கும் யார் மகப்பேற்று சத்திரசிகிச்சை செய்கிறார்களாம். அவை சுகப்பிரசவத்தில் குட்டி ஈனுவதைப்போல் நாங்களும் சுகப்பிரசவத்தில்த்தான் குழந்தை பெற வேண்டுமாம். அந்த காலத்தில் பெண்கள் ஆரோக்கியமாக இருந்ததால்தான் சத்திரசிகிச்சை தேவைப்படவில்லையாம். இந்த காலப்பெண்கள் இயற்கையோடு வாழாமையால் ஆரோக்கியமற்று இருப்பதால் சுகப்பிரசவம் நடப்பதில்லையாம். அட அரை வெங்காயங்களே, விலங்குகள் எந்த நோய்க்காவது மருத்துவரை சென்று பார்க்கின்றனவா? நீங்கள் மட்டும் ஏன் தொட்டதற்கெல்லாம் மருத்துவரை நாடுகிறீர்கள்? தொப்புள் கொடி திருகி இறந்த சிசுக்களின் கதைகள் தெரியுமா உங்களுக்கு? பிறக்கும் நேரம் திசை மாறி திரும்பி இருந்தால் நடக்கும் விபரீதம் அறிவீர்களா?




அதன் போதான வலியை கொஞ்சமாவது உணர்வீர்களா? செத்துப்பிறப்பது போல் இருக்கும். அதில் செத்துப்போனவர்களும் உண்டு.

பெத்துப்போடுவதற்கு முதல் செத்துப்போனவர்களைப் பார்த்தும் தாயாவதை யாரும் தள்ளி வைத்ததில்லை. பெண்மை மென்மை என்று சொன்னவன் எவன்? மரணத்தின் விளிம்பு நிச்சயம், சிலவேளை மரணமும் சாத்தியம் என்று தெரிந்தும் வரமாய் தவமிருந்து வலியை ஏற்கும் தைரியத்தையா மென்மை என்கிறீர்கள்?

சத்திரசிகிச்சை வந்ததால் எங்களின் இறப்பு வீதம் குறைந்தது உண்மை தான். ஆனால் மகப்பேற்றுக்கான சத்திரசிகிச்சையை கண்டு பிடிக்க எங்களில் பலர் பரிசோதனை எலியான கதை தெரியுமா? “நவீன மகப்பேற்றியல் மருத்துவத்தின் தந்தை” என்று புகழப்படும் தெற்கு கரோலினாவைச் சேர்ந்த மருத்துவர் ஜேம்ஸ் மரியன் சிம்ஸ் (1813-1883) என்ற நுரைக்குள் மறைந்துபோன அனார்ச்சா என்ற கப்பச்சினோவின் கதை தெரியுமா?

மருத்துவர் சிம்ஸ் மகப்பேற்றியலில் வரலாறு படைப்பதற்காக ஒடுக்கப்பட்ட கறுப்பின மற்றும் ஏழை அயர்லாந்து கருவுற்ற பெண்களை பரிசோதனை எலிகளாக்கி, கொடூர ஆய்வுகளை நடாத்தினார். அதில் அகப்பட்டவர்களில் ஒருத்திதான் அனார்ச்சா.





ஒரு அடிமைப்பெண் என்கிற வகையில் அனார்ச்சாவின் வாழ்க்கை சிக்கலானது. தகிக்கும் வெயிலில் பருத்தி பறிப்பது, முதலாளியின் வீட்டு வேலைகள் செய்வதென தினமும் 18 மணிநேர வேலை. அடிமைகளின் வலி அவர்களைத்தவிர எவருக்கும் வலிக்காது, உறைக்காது. எந்த நேரமும் குழந்தை பிறக்கலாமென்ற நிலையில் அவள் இருந்தாள். அன்றிரவே மகப்பேற்றுக்கான வலி ஏற்பட்டது. விரைவாக குழந்தை பிறந்து விட வேண்டுமென வேண்டினாள். தாங்க முடியாத வலியினால் மட்டுமல்ல, இதனை காரணம் காட்டி மறுநாள் வேலைக்கு செல்லாமல் இருக்க முடியாதென்பதும் தான். ஆனால் அவள் ஆசை நிறைவேறவில்லை. குழந்தை வெளிவரவே இல்லை. தொடர்ந்து மூன்று நாட்களாக வலியோடே இருந்தாள். குழந்தையையும் வரவில்லை, வேலைக்கும் செல்ல முடியவில்லை. அனார்ச்சாவின் இயலாத்தன்மையால் முதலாளி நட்டப்பட்டார். முதலுக்கே ஆபத்தென உணர்ந்து மருத்துவரிடம் அனுப்பி வைத்தார்.

வெட்டப்பட்ட வயர்த்துண்டிலிருந்து கம்பியை குறட்டால் இழுப்பதை பார்த்திருக்கிறீர்களா? அது போன்ற ஒரு முறையில் அந்த மருத்துவர் அனார்ச்சாவின் குழந்தையை வெளியில் எடுக்க பலவாறு முயற்சித்தார். அந்த கொடூர முறையில் கூட அந்த மருத்துவருக்கு அனுபவக் குறைவு இருந்தது தெரிந்தது. அடிமைகளின் கண்ணீரும், வலியும் எவர் கண்ணுக்கும் தெரிவதில்லை. ஏற்கனவே வலியால் சோர்ந்திருந்தவளை அவர் மேலும் கொடுமைப்படுத்தினார். அந்த மருத்துவர் களைத்து விட்டால் ஆய்வு சில மணி நேர இடைவெளியில் தொடரும். குழந்தைக்கான ஏக்கத்தோடு மருத்துவமனைத் தரையில் பலநாளாய் இருந்தாள். அங்கே பலர்

அவளைப்போலவே அவரது ஆய்வில் வதை பட்டுக்கொண்டிருக்கும் உண்மை அவளை மேலும் பயங்கொள்ளச்செய்தது. அங்கிருந்து தப்பிக்க நினைத்தாள். ஆனால் அவளால் எழுந்திருக்கவே இயலவில்லை.

குறடுகளும், இடுக்கிகளும் பதம் பார்த்ததில் அவளது பிறப்புறுப்பு பலவாறாய் காயப்பட்டிருந்தது. அறுவை சிகிச்சை மூலம் தையல் போடுவதென்று மருத்துவர் தீர்மானித்தார். மயக்க மருந்துகளின்றியே ஒவ்வொரு கிழிசல்களையும் ஒவ்வொரு விதமாக தைத்துப்பார்த்தார். அனார்ச்சாவின் நிலையிலிருந்த மற்றப்பெண்களோடு, அனார்ச்சாவின் காயத்தின் நிலைமைகளை ஒப்பிட்டு ஆய்வு செய்தார். உண்ணும் உணவை மட்டுப்படுத்தினார். மலங்கழிப்பதை தடுக்க தொடர்ச்சியாக மருந்துகள் கொடுத்தார். வலியோடு இருக்கும் போது தூக்கம் வராது. அபூர்வமாய் சில வேளை தூக்கம் வந்தாலும் திடீரென பயங்கரமாய் வலிக்கும். முழித்துப்பார்த்தால் அவர் அவளிடம் எந்த அனுமதியும் பெறாமலே அவளது பிறப்புறுப்புக்களில் ஆய்வுகள் செய்து கொண்டிருப்பார்.



அனார்ச்சாவின் வலி தீர்த்து குழந்தையை பெற்றெடுப்பதற்காக அந்த அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படவில்லை. அது அவளுக்கும் தெரியும். எதிர்கால கர்ப்பவதிகள் குறைந்த வலியோடு பிள்ளை பெற ஒரு முறையை அறிமுகம் செய்யும் கண்டுபிடிப்புக்காகத்தான் அனார்ச்சா போன்ற பெண்கள் துன்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் குழந்தையைப்பெற்றார்களா? இல்லையா? இதைப்பற்றி எவரும் கவலைப்படவில்லை. வரலாறும் அவற்றை தன் பக்கங்களில் குறித்துக்கொள்ளவில்லை. அந்த வலிகளும் கொடுமைகளும் அந்த கண்டுபிடிப்பினுள் காணாமல் போயின.

கருவுற்றவர்களை கொடுமைப்படுத்தியவர் வரலாறாய் இன்றுவரை கொண்டாடப்படுகிறார். பல விருதுகளும் அவர் வசம். ஆனால் வலிகளை சுமந்தவர்களை இந்த உலகம் பெயரளவிற்கேனும் ஞாபகம் கொள்ளத் தயாரில்லை. பெயருக்காகவோ, புகழுக்காகவோ இதை கூறவில்லை. ஆனால், கருவுற்ற பின் ஏற்படும் வலிகள் தான் உலகிலேயே மிகப்பெரிய வலிகள் என்கிறார்கள். அந்த வலியோடு அந்த விஞ்ஞானியின் விபரீத ஆய்வுகளால் உண்டான வலியையும் தாங்கியவர்களின் கதை பெயரளவிற்கேனும் வரலாறாய் நிலைக்காதது வருத்தமே.

கர்ப்பிணி என்று சொல்லாதீர்கள். நாங்கள் நோயாளிகளல்ல. கர்ப்பவதி, கருவுற்றவள், தோகதவதி என அன்போடு அழையுங்கள். பிரசவம் என்றும் சொல்லாதீர்கள். குழந்தை பெறுவது பேறு. மகப்பேறு என்று சொல்லுங்கள். வழக்கில் வந்த கர்ப்பிணி மற்றும் பிரசவம் ஆகிய இரு சொற்களையும் வழக்கில் இருந்து நீக்குங்கள். மருத்துவமனைகளில் தொங்கும் அட்டைகளில் கூட அந்தப்பெயர்கள் இனி வேண்டாம். வாய் இனிக்கும் அந்த அன்புச்சொற்களில் அழையுங்கள். அதோடு சத்திரசிகிச்சையில் குழந்தை பெறுவது ஆரோக்கியமற்றதென எண்ணாதீர்கள். அவரவர் உடல்நிலைக்கேற்ப அவரவரை அணுகுங்கள். கருவுற்றவள் ஆசைகளை நிறைவேற்ற வேண்டுமாம். அன்புரிமையோடு கேட்கிறேன். என் ஆசைகளை நிறைவேற்றுங்கள். பிறக்கப்போகும் என் மகவுக்கு நீங்கள் வழங்கும் பிறந்த நாள் பரிசு இதுதான். செய்வீர்களா?

**இப்படிக்கு,**
**தோகதவதி**

# திரைத்தமிழ்

**கருத்து :** நாம தான் எல்லாத்தையும் மாத்திட்டம். மறுபடியும் நாம தான் எல்லாத்தையும் மாத்தனும்.
**திரைப்படம் :** சீறு
**எழுதியவர் :** ரத்தின சிவா
**காணொளி இணைப்பு :** https://www.youtube.com/watch?v=aTv1ozHhQ1s

பவித்ரா: எங்க வீட்டுக்கு பக்கத்தில ஒரு நாய் குட்டி போட்டுது. எங்க வீட்டுக்கு பக்கத்தில ஒரு நாய் 10 குட்டி போட்டுதுங்க. அந்த 10 குட்டியும் ரொம்ப அழகா இருக்கும். அதுன்ட அம்மாக்கிட்ட இருந்து ஒவ்வொரு குட்டியா பிரிச்சு பிரிச்சு எடுத்துட்டு போனாங்க. அதில ஒரு குட்டி மாத்திரம் றோட்ல இங்கயும், அங்கயும் பாவமா சுத்திட்டு இருந்திச்சு.

அது எங்கயும் வண்டில அடிபட்டிட போதுனு நானும் தாத்தாவும் ஓடிப்போய் தூக்கினோம். தூக்கும் போதே எங்க தாத்தாகிட்ட கேட்டேன். "ஏன் தாத்தா எல்லா குட்டியையும் எடுத்திட்டு போனவங்கள் இந்த ஒரு குட்டியை மாத்திரம் விட்டிட்டு போய்ட்டாங்களே?"னு அதுக்கு என் தாத்தா சொன்னாரு, "எடுத்திட்டு போனதெல்லாம் ஆம்பிள குட்டிமா. இது பொம்பிளை குட்டி அதுதான்' என்றார். நான் கேட்டேன், "எல்லா குட்டியையும் பெத்து போட்டது ஒரு பொம்பிளை குட்டி தானே தாத்தா" அப்பிடின்னேன். அதுக்கும் அவர் சொன்னாரு, "ஆம்பிளை குட்டி எல்லாம் வீட்ட பாத்துக்கும்மா பொம்பிளை குட்டி தெருவுல சுத்தும் என்னாரு.

அந்த ஒரு பொம்பிள குட்டிய நான் எடுத்து வந்து வளர்த்தன். Training கொடுத்தன். எடுத்திட்டு போன எல்லா ஆம்பிள குட்டியும் வீட்ட தான் பாதுகாத்தது. ஆனா நான் எடுத்திட்டு வந்த பொம்பிள குட்டி இந்த ஊரையே பாதுகாக்குது.

நீங்க கூட பாத்திருப்பீங்க போன மாச Magazineல. அது என் Dog தான்.

So பெண்கள் நாய்க்குட்டில கூட ஆண்களுக்கு சளைச்சவங்கள் இல்லைங்க. ஆணும் பெண்ணும் சமம். Same Power.

என்னண்ணா Okவா?

மித்ரசகி

ஊடகவியலாளர்: Super பவித்ரா. இவ்வளவு Boldஆ பேசுறீங்க. உங்க Life Plane என்ன? என்ன படிக்க போறீங்க? What Next?

பவித்ரா: I wanna become a Lawyer. Criminal Lawyer.

ஊடகவியலாளர்: அம்மாடி Physicsல Centum வாங்கி இருக்கிறீங்க. தமிழ், English, Maths இதெல்லாம் Ok. Physicsல Centum வாங்குறது அவ்வளவு சுலபம் கிடையாது. விஞ்ஞானி ஆகப்போறன், நாசாக்கு போகப்போறனு சொல்லுவீங்கனு பார்த்தா வக்கீலாகப்போறனு சொல்றீங்க.

பவித்ரா: நாடே நாசமாய் போய்ட்டிருக்கு நான் நாசாவுல போய் என்ன பண்ணப்போறன்?

இங்கு அரசு சரியில்லை. அரச அதிகாரிகள் சரியில்லை என்டு சொல்லிட்டே இருந்தா, எப்படி அண்ணா? நம்ம ஊரு நாமா தானே யாரேச்சும் இறங்கி சரி பண்ண வேணும். அதுக்கு தான்.

ஊடகவியலாளர்: அதுக்கும் வக்கீலுக்கும் என்னம்மா சம்பந்தம்?

பவித்ரா: Simpleனா. இங்கு சட்டமும் நீதித்துறையும் சரியா இருந்தா தான் ஒரு நாடு உருப்படும். புரியல,

தண்டனைகள் கடுமையா மாறனும். அந்த நாட்டுக்கு போனா இப்படி பண்ண முடியாது. ஐயையோ இந்த நாட்டுக்கு வந்தா இப்படி பண்ண முடியாது. தனிய வெளிநாட்டு பெருமையை பேசிட்டு இருக்கிறோம். ஏன்?

அங்க எல்லாம் சட்டம் சாட்டையடி அடிக்குது. பெண்ணை *Rape* பண்ணினா நடு றோட்ல நிக்க வைச்சு தலையை வெட்டுறாங்கள். ஆனா இங்க ஒருத்தண்ட ஒரு சுண்டு விரல கூட நம்மளால வெட்ட முடியல. வெறும் தண்டனை அனுப்புறது மட்டும் தான் ஆண்டவனோட வேலை. அத ஆள் மாறாமா, *Address* மாறாமா, ஏன் அவன் *Initial* மாறாமா சரியாய் கொண்டு சேர்க்கிறது தான் ஒரு வக்கிலோட வேலை. இங்க செய்கூலியும் சேதாரமும் எப்பவும் ஆள்மாறி போய் சேந்திடுது. அது செஞ்சவனுக்கு *Correct* ஆ போய் சேரனும்

ஊடகவியலாளர்: இந்த வயசில இந்தளவு கோபமா? இது உங்களுக்கு வேணுமா?

பவித்ரா: என் கோபம் உண்மை. இதெல்லாம் பாக்க உங்களுக்கு புதுசா இருக்கு எல்லோ?

இருக்காதே பின்னே. உங்க கோபத்தை தான் *Museum*ல வைச்சு பல வருசமாச்சே. எங்க காட்டுறீங்க? *Road*ல சிலிண்டர் வண்டி தள்ளிட்டு போறவரிட்டயும், குப்பை அள்ளுற குப்பை *Lorry* காரங்களிட்டயும் *Corn* அடிச்சு காட்டுறீங்க. மிஞ்சிப்போனா *Whatsapp*ல *Status* போட்டு முடிச்சிடுவீங்க உங்க கோபத்தை.

ஊடகவியலாளர்: சரி சரி. உங்க கோபம் என்ன பண்ணப்போது?

பவித்ரா: கண்டிப்பா பண்ணும்னா. என்னை தினம் தினம் தூங்க விடாமா பேய் மாதிரி துரத்திட்டு, *Mega Serial* மாதிரி இழுத்திட்டு போற பல *Case* இருக்கு. விட்டா நாளைக்கே வாதிட போயிடுவேன். அவ்வளவு வெறி இந்த வக்கீல் *Coat*ஐ மாட்ட.

ஊடகவியலாளர்: அம்மா. இப்ப தானே நீ *Plus2* முடிச்சிருக்காய். இன்னும் எத்தனை வருஷமிருக்கு வக்கீலாக. அப்புறம் இந்த *Case*க்கான *Evidance, Points* எல்லாம் எங்க இருந்து *Collect* பண்ணுவாய்? என்ன பண்ணுவாய்?

பவித்ரா: ஏன் அண்ணா? நீங்க எல்லாம் இருக்கற போது நான் ஏன் அலையப் போறேன்? சரி சொல்லுங்க மொத்தம் எத்தனை பத்திரிகை இருக்குனு?

ஊடகவியலாளர்: என்ன ஒரு 230 இருக்கும்.

பவித்ரா: ஆஆ இந்த 230 பத்திரிகையிலயும் ஒரு செய்தியை ஒரே மாதிரி சொல்றதில்லையே. ஒவ்வொருத்தரும் தனி தனி கதையாய் எல்லோ சொல்றீங்க. அது போதுமே. அத்தனை ஓட்டை. அவ்வளவு *Points. Bundle Bundle* ஆ *Collect* பண்ணி வைச்சிருக்கன் அண்ணா.

ஊடகவியலாளர்: எந்த எந்த *Case?*

பவித்ரா: அது இருக்கும்னா 100 *Case.*

ஊடகவியலாளர்: அதில ஒரு 4 முக்கியமான *Case* மட்டும் சொல்லுங்க பாக்கலாம்?

பவித்ரா: *Minister* பையங்க பண்ணினா *Gang rape.*

தமிழ்நாட்டு பெரும்புள்ளியுடைய *Medical College Class Room*ல நடந்த ஆறு பெண்கள் *suicide*



தமிழ்நாட்டின் கலியுக கடவுள் சுவாமிகள் மர்ம ஆச்சிரம *Case*

ஊடகவியலாளர்: அந்த 4 *Case* யாருடையதுனு தெரியுமா? அதை விட அவங்க *Background* ரொம்ப முக்கியம்.இந்த *Case* எல்லாம் *Handle* பண்றது யாருனு தெரியுமா? *The Ashok Mithran. No1 Criminal Lawyer.*

பவித்ரா: இப்படியே Buidup பண்ணி Buildup பண்ணி எதிர்த்து பேசவே விடமாட்டிங்கள் எல்லோ கொஞ்சம் முன்னேறினா பேசியே முட்டி உடைச்சிடுவிங்கள் எல்லோ.

அசோக்மித்ரன். அவன் எல்லாம் ஒரு Advacateஆ? சாமியாருக்கு சாம்பிராணி போடுறவனும். Minister வீட்ட Toilet கழுவுறவன் எல்லாம் Advacate. இங்க நாம தான் எல்லாத்தையும் மாத்திட்டம். மறுபடியும் நாம தான் எல்லாத்தையும் மாத்தனும்.

பார்வையாளர்: டேய் சின்னப்பிள்ளை எப்படி பேசுது பார்டா.

பவித்ரா: புத்தம் செய்து சுத்தம் செய்யும் ஏர் முளையும் நாங்கள்
இரத்தம் சிந்தி யுத்தம் செய்யும் வாள் முனையும் நாங்கள்
எங்கள் மேனியை மட்டும் நீ யோசித்ததாலே நாங்கள் வீதி தேவதைகள் இல்லை.
ஞானியானாலும் நியாய தட்டில் நிறுத்தும் நீதி தேவதை நாங்கள்
வதைக்க செய்பவர்களை பழி தீர்ப்பேன் வாதத்தில்
பாவிகளையும் விழ வைப்பேன் என் பாதத்தில்
வெள்ளை நிற நீதி தேவதையை காக்கவே கறுப்புடை தேவைப்படுகிறது
கற்புடை பெண்களை இனி படையாகவும் கறுப்புடை அங்கியே இனி என் அடையாளம்



## வாள் வழங்கும் விழா

வருணகுலத்தானிற்கு வாள் வழங்கும் விழா. நல்லை மண்ணில் அது ஒரு மங்கலநாள். வீரமாகாளி கோயில் விழாக்கோலம் பூண்டிருந்தது. கோயிலின் இரு மருங்கிலும் உள்ள வீதிகள் பச்சைக்கமுகு மற்றும் பல்வேறு எண்ணிக்கையிலான வாழைமரங்கள், கரும்பு, மணிமாலைகள், தோரணங்கள் ஆகியவற்றால் அழகுறச்செய்து பொன்னிறமான நகர் இது என கண்கள் நம்பும்படி அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மக்கள் கூட்டம் கூட்டமாய் குவிந்து தஞ்சைத்தளபதிக்கு வாள் வழங்கும் கௌரவத்தை கொண்டாட காத்திருந்தனர். ஐயாயிரம் வீரர்களின் படைவரிசை ஆலய முன்றலில் அணிவகுத்து நின்றது.

வீரமாகாளி சந்நிதிக்கு எதிரே மேடையிட்டு பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன. பந்தல் மேடை முழுதும் அழகிய சந்தனத்தால் மெழுகப்பட்டிருந்தது. மாமன்னர் சங்கிலியர் உட்பட்ட அரசவை அங்கத்தவர்கள் எல்லோரும் மேடையில் வீற்றிருந்தனர்.




**காவ்யமோகன்**

ஆடல் 10

அன்னை காளிக்கு நிவேதனப்பொருள் மடையாகப் பல்வேறு வகையான அன்னவகைகள் சமைக்கப்பட்டு மேருமலைபோல் குவிக்கப்பட்டிருந்தன. அதனுடன் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் ஆகிய செங்கனிகளும், செவ்விளநீர், தேன், நெய், பலகாரவகை, பால் என அமிர்தக்கடலாய் அங்கு படைக்கப்பட்டிருந்தன. வச்சிரமணி பதிக்கப்பெற்ற அழகிய காளாஞ்சியில் வெற்றிலை பாக்கும் வைக்கப்பட்டிருந்தன.

குற்றமற்ற மறையோரான கங்காதரக்குருக்கள் கையிற் காப்புத்தரித்து, ஓமாக்கினியை வளர்ப்பித்துச் அன்னை வீரமாகாளியின் பாதங்களருகில் இடபவடிவிலான ஓர் உருவத்தை வரைந்து அதன் மேல் எட்டுத்திசைகளிலிருந்தும் கொண்டு வரப்பட்ட சுத்தமான அரிசியைத் தாமரைப்பூ வடிவிற் பரப்பி ஐந்து வண்ணப்பொடியினால் அதனை அலங்கரித்து பச்சைநிறத்தருப்பையை அதன் மேற் பரப்பி அதன் மேற் பொற்குடத்தை வைத்து அக்குடத்திற்குச் சிவந்த பொன்பட்டுச் சார்த்தி முளைப்பாலிகைகளை அதன் மேற் பரப்பி ஆகம மந்திரங்களால் ஆவாகனஞ் செய்து பூசித்துக்கொண்டிருந்தார். சண்பகம், அலரி, தாமரை, திருக்கொன்றை ஆகியவற்றின் மலர்களை வேதமந்திரங்களை உச்சாடனம் செய்து சாத்திக்கொண்டிருந்தார்.

பின்னர் திரு மஞ்சற்குடத்தைக் கையிலேந்தி அன்னையின் பாதங்களில் வைக்கப்பெற்றிருந்த இரண்டு ஒளிவீசும் அழகிய வாள்களில் அபிசேகஞ் செய்தார்.

மங்கள வாத்தியங்களான சல்லரி, பேரிகை, தவில், முரசு, தண்ணுமை போன்றன ஆர்த்தன. மந்திரங்கள் ஒலித்தன. வனிதையர் பல்லாண்டு கூறி நின்றனர். அழகிய சாமரங்கள் இரட்டின.

பதினாறு விதமான பூசா உபகாரங்களும் நிறைவுற்ற பின் கங்காதரக்குருக்கள் அன்னையின் பாதக்கமலங்களிலிருந்த வாளினை எடுத்து தாம்பூலத்தில் வைத்து மாமன்னர் சங்கிலியன் கரங்களில் கொண்டுவந்து சேர்ப்பித்தார்.

கொம்புத்தாரைகள் கூவி முழங்க சங்கிலியன் வாளினை வருணகுலத்தானிற்கு வழங்கினான். வாளினை ஏற்றுக்கொண்டு வணங்கிநின்றான் வருணகுலத்தான்.


'ஈழநாட்டில் வீரம் முழங்க வந்த தளபதியாரே, இக்கணந் தொட்டு ஈழநாடு தங்கள் வீரத்திறன் காணத் தயாராகிறது' என்று சங்கிலியன் பெருங்குரலாய் உரைத்தான்.

'அது என் பிறவிப்பேறு அரசே, அன்னை வீரமாகாளி மேல் ஆணையிட்டு சொல்கிறேன். வந்த கடமை நிறைவுறாது வருணகுலத்தான் ஈழம் விட்டு அகலான்' என்று புருவங்கள் உயர வீரத்தளபதி ஆவேசமாய் கத்தினான்.

'வருணகுலத்தாரே, தமக்காக இன்றைய நாளில் ஈழநாட்டின் ஈடு இணையில்லா பரிசொன்றையும் தருவதற்கு சித்தமாயிருக்கிறோம்' என்று சங்கிலியன் கூறிய போது வருணகுலத்தான் சிலகணம் திகைத்து நின்றான்.

அந்நேரம் சேவகன் ஒருவன் அலங்கரிக்கப்பட்டிருந்த அழகிய குதிரை ஒன்றை மேடைக்கு அழைத்து வந்தான்.

'வருணகுலத்தாரே, இது அஸ்வதமங்கலம். அரண்மனை தொழுவத்தின் ஆகச்சிறந்த புரவி. ஈழ நாட்டின் சந்துகள் எல்லாம் தடையின்றி பயணித்து மீண்டு வர வல்லது. இதன் துணை கொண்டு ஈழத்தின் எந்தத்திக்கும் தாங்கள் தளராமல் சென்று வரலாம். இன்றுமுதல் அஸ்வதமங்கலம் தங்களுடையாதாகும்' என்றான் சங்கிலியன்.



திவாகரன்

வருணகுலத்தான் பணிவுடன் அஸ்வதமங்கலத்தை ஏற்றுக்கொண்டான்.

அந்நேரம் எங்கிருந்தோ கணீர் என்ற ஒரு சத்தம் அவையோர் எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது. மேடைப்படிகளில் கால் தவறி கீழே விழுந்து கிடந்தார் கங்காதரக்குருக்கள். அவர் கைகளிலிருந்த தாம்பூலத்தட்டும் கீழே கிடந்தது.

மாமன்னர் சங்கிலியனுடைய வாளும் அன்னையின் பாதங்களில் பூசைக்காக வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்து வரும் வழியிலே கங்காதரக்குருக்கள் படிகளில் கால்கள் தடுமாறி விழுந்துள்ளார். சங்கிலியன் திடுக்கிட்டு நின்றான். சில கணங்கள் அங்கு பேரமைதி நிலவியது.

கீழே விழுந்த வாளினை கைகளில் ஏந்திக்கொண்டு கங்காதரக்குருக்கள் அவசரமாக அரசனருகில் ஓடி வந்தார்.

'அரசே, மன்னிக்க வேண்டும், எதிர்பாராத விதமாய் அடியேனின் கவனக்குறைவாலே இது நிகழ்ந்து விட்டது. அன்றி துர்சகுனமாய் கொள்ள எதுவுமில்லை' என பணிவோடு கூறினார் கங்காதரக்குருக்கள். திகைப்பிலிருந்த சங்கிலியன் ஒருவகையாய் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு அவையோரை நோக்கி பேசத் தொடங்கினான்.

'அன்னை வீரமாகாளி சந்நிதியில் துர்சகுனம் என்ற பேச்சிற்கு இடமில்லை. நிகழ்வன எல்லாவற்றையும் நிகழ்த்துபவள் அவளே, வாள் தவறியமை கூட அன்னை நமக்கு அறிவிக்கும் ஓர் எச்சரிக்கை செய்தியே- எச்சரிக்கையாய் இருப்போம்.

அதற்காய் போரினை நிகழ்த்தாமல் இருந்துவிடவேண்டும் என்று அர்த்தமல்ல. அதிகம் அவதானம் வேண்டும் என அன்னை காளி வழி கூறுகிறாள்' என்று கூறியவாறே கங்காதரக்குருக்களிடமிருந்து வாளினை வாங்கிக் கொண்டான் சங்கிலியன்.

'அன்னையின் ஆணை ஏற்று ஈழமண்டலத்தில் அந்நிய பேடிகளை அடியோடு விரட்டி எம் இராச்சியத்தை நிறுத்துவதே என் வேட்கையாகும். அப்பணியில் என் உயிர் குறித்து நான் எவ்வித அச்சமும் கொள்ளேன். தஞ்சைப்படைகளின் பேருவதவியோடு எம் வீரத்திறனை பறைசாற்றி ஈழத்திருநாட்டை வெற்றி கொள்ளச் செய்வேன். அதற்கு அன்னை வீரமாகாளி எப்போதும் துணை நிற்பாள்' என ஆக்ரோசமாய் கூறினான் சங்கிலியன்.

வாள் வழங்கும் வைபவம் அத்தோடு நிறைவுற்றது. ஆயினும் சங்கிலியன் மனம் சங்கடத்தில் தான் இருந்தது. அவையோரும் தமக்குள் என்னென்னவோ பேசிக்கொண்டு அவ்விடத்தை விட்டு விலகாமல் நின்றனர். அங்கே சந்தனமேடை எதற்காகவோ தயாராகிக்கொண்டிருந்தது. வாளேந்திய வருணகுலத்தானும் அவையோரும் எதற்காகவோ ஆவலோடு காத்திருக்கின்றனர்.

**மேடை திறக்கும்...**

# அட்டைப்படம் பற்றி...

**ஒளிப்படம் : உதயராசா ஜெல்சின்**

வெடுக்கு நாறி மலை ஆதி லிங்கேசுவரர் ஆலயம் தனக்கான தொன்மை வரலாற்றை இழந்து விடுமோ என்கிற சூழலில் இன்று அனைவரது கவனத்தையும் ஈர்த்த ஒரு திருத்தலமாகி இருக்கிறது. வருடாந்த பொங்கல் விழா இவ்வாண்டு வழமையிலும் சிறப்பாக நடைபெற்றதாக கூறப்படுகிறது. இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் மக்கள் குறிப்பாக இளையவர்கள் ஆலயத்திற்கு வருவது அதிகரித்துள்ளது.




வானுயர்ந்த கோபுரங்கள், கலையம்சம் நிறைந்த கட்டிட வேலைப்பாடுகள் எதுவுமின்றி இயற்கையோடு இசைந்த சூழலில் காணப்படும் இந்த ஆலய சூழல் ஒரு அற்புதமான அனுபவத்தை தந்ததாக கூறுகிறார்கள்.

இந்த ஆலயத்தின் பூசை முறையில் புதுமை இருப்பதாக கூறுகிறார்கள். ஆனால் இதுதான் பழமையான எமது வழமை என்பதை மறந்து கொண்டிருக்கின்றோம் என்பது தான் கசப்பான உண்மை. இறந்த காலத்தை இறக்கச்செய்யாமல் எதிர்காலத்திடம் கையளிக்க வேண்டுமென்பதை நிகழ்காலத்திற்கு இந்த ஆலயச்சூழல் மேலுமொரு முறை இடித்துரைத்திருக்கிறது. ஆவணமாக்கி பேண ஆதிசிவன் மட்டுமல்ல, அருகே தமிழி எழுத்துக்களாலான கல்வெட்டுக்களும் உள்ளன இந்த வெடுக்குநாறி மலையில்...

# ஆங்கிலம் அவசியம்

"இங்கிலீஸ் எண்டது அறிவில்ல. அது ஒரு மொழி தான்" என்ற இந்த வார்த்தைகளை தொண்ணூறு தொடக்கம் இரண்டாயிரம் ஆண்டுகளில்(90s kids) பிறந்த நாம் பல இடங்களில் காதாரக் கேட்டுள்ளோம். இதைக்கேட்டு வளர்ந்ததால் தானோ என்னவோ தாய் மொழி மீது கொண்ட அதீத காதல் என்று ஆங்கிலத்தின் அவசியத்தை புரியாது இருந்துவிட்டமோ தெரியவில்லை. பள்ளிப்பருவத்திலே ஆங்கிலப்பாடம் என்றாலே ஏதோ ஒரு புத்துணர்வு தோன்றும். காய்ச்சல், தலைவலி போன்ற நோய்களும், நூலகத்தின் அருமையும், பாடவேளையிலான குட்டித்தூக்கத்தின் சுகமும் அப்போது தான் தெரியவரும். எவ்வாறு எல்லாம் பாடவேளையை கட் அடிப்பது என்று விஞ்ஞானிகள் போல சிந்தித்து இருப்போம்.



ஆங்கிலத்தை அயல்நாட்டு மொழியாகவே பார்த்துப் பழகிவிட்ட நாம் பாடசாலைக்கல்வியை முடித்துவிட்டு அடுத்த கட்ட நகர்வைப்பற்றி யோசித்து ஒருபடி முன்னோக்கிச் செல்லும்போது முதல் தடையாக ஆங்கிலம் வருகின்றது. பல்கலைக்கழக பட்டப்படிப்பை ஆங்கிலத்தில் தொடரவேண்டும் என்ற நிலைவரும் போது தம்மால் அத்துறையை தேர்ந்தெடுத்து கற்க இயலாது என சிலர் வேறு துறைகளுக்குள் நுழைந்து தமக்குக்கிடைத்த சிறந்த வாய்ப்புக்களை நழுவ விட்டு விடுகின்றார்கள். பலர் அரைகுறை ஆங்கில அறிவுடன் அதீத தேர்ச்சி மட்டத்தை அடையமுடியாது தட்டுத்தடுமாறி கரைசேர்கின்றார்கள். பல்கலைகழக அனுமதிக்கான உளச்சார்புத்தேர்வை ஆங்கிலத்தில் எழுத வேண்டும் என்ற கட்டாயத்தில் சிலர் அவ்வாறான தேர்வுகளை எழுதுவதையும் தவிர்த்து வருகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் சட்டக்கல்லூரியின் அனுமதிப்பரீட்சைக்கு ஆங்கிலமொழி அவசியம் என்பதை விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னரே தெரிந்துகொண்டு ஆங்கில வகுப்புக்களை தேடி ஓடுகின்றனர். இந்த வருடம் திறந்த பல்கலைக்கழகத்தில் LLBயில் மூன்றாம் மட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்து மட்டங்களையும் ஆங்கிலத்தில் கற்கவேண்டும் என்ற நிபந்தனையை அறிந்த பின்னர் பலர் தமது முடிவுகளில் சிறிது தடுமாற்றத்தை வெளிப்படுத்தும் தன்மையையும் காணக்கூடியதாகவுள்ளது. நானும் இவ்வாறான ஒருநிலையில் உள்ளவன்தான். இருப்பினும் இந்த தடைகளைக் களைந்து எமது இலக்கை நாம் அடைவதற்கு உரிய பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அந்நிய மொழியின் அவசியத்தை உணர்ந்து ஆர்வம் கொண்டால் ஆங்கிலம் கற்றலும் இலகுவாகும்.

ஆம், இந்த கட்டுரை எதற்காக என்ற கேள்வி உங்கள் மனதில் எழுலாம். எம்மைப் போல நம் அடுத்த தலைமுறையினர் இவ்வாறான சிக்கல்களுக்கு முகம் கொடுக்காது இருக்க தற்போதே நாம் அவர்களுக்கு ஆங்கிலத்தின் அவசியத்தை தெரியப்படுத்த கடமைப்பட்டுள்ளோம். அதுமட்டுமின்றி உரிய தரப்பினரும் ஆங்கிலத்தை வெறுமனே பாடப்புத்தகக் கல்வியாய் இராது மாணவர்களாகவே முன்வந்து கற்கும் வகையில் அவர்களது ஆர்வத்தை அறிந்து கற்பதற்கான மாற்று செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

ஆங்கிலத்திலான கார்ட்டூன்களையும், நிகழ்ச்சிகளையும் சிறுவர்களுக்கு காட்சிப் படுத்துவதோடு, சிரித்து சிந்தித்து விளங்கிக்கொள்ளும் வகையிலான ஆங்கிலத் திரைப்படங்களையும் காட்சிப்படுத்தலாம். விளையாட்டுக்களில் ஆர்வம் உள்ளவர்களுக்கு அவ்விளையாட்டுக்களின் ஆங்கில வருணனைகளைப் பார்ப்பதை ஊக்குவித்தும் ஆங்கிலத்தின் மீதான ஆர்வத்தினை அவர்களிடையே அதிகரிக்கச் செய்யலாம். மாணவர்கள் தமக்கிடையே

ஆங்கிலத்தில் உரையாடுவதற்கான ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் ஆங்கிலத்தில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கலாம். இவ்வாறு தொடர்ந்து ஆங்கிலத்தை அவர்கள் தினம்தினம் பயன்படுத்தும் போது அவர்கள் தாம் விடும் பிழைகளை தாமே உணர்ந்து அதனைத் திருத்தும் அளவிற்கு அவர்கள் தம்மை வளர்த்துக் கொள்வார்கள். அதுமட்டுமின்றி உயர்தரத்தினுள் நுழையும் மாணவர்களை முக்கிய மூன்று பாடங்களில் செலுத்தும் அக்கறையில் சிறிதளவேனும் ஆங்கிலப்பாடத்திலும் கவனம் செலுத்தும் வகையில் மாணவர்களை ஊக்குவிப்பது அனைவரினதும் கடமையாகும். ஆங்கிலம் என்பது சர்வதேச மொழியாக இருப்பதனால் அதைக் கற்பதன் மூலமாக மேலைத்தேய நாடுகளின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், கலாச்சாரம் போன்ற பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் உருவாகின்றது.

இனிவரும் நம் எதிர்கால தலைமுறையினர் ஆங்கிலத்தை வெறுமனே அந்நிய மொழியாக எண்ணாது அது எம் முன்னேற்றப்பாதையின் படிக்கல்லாகவோ தடைக்கல்லாகவோ அமைந்து எம் பாதையினை மாற்றிடும் பாரிய சக்தி என்பதை உணர்ந்து ஆங்கிலக் கல்வியில் கவனம் செலுத்த அனைவரையும் ஊக்குவிப்போம்.

*ம.சேவியர் சுதர்சன்*

# வேரும் விழுதும்

தமிழர்கள் இன்று உலகெங்கும் வியாபித்து செறிந்து வாழ்கிறார்கள். எனிலும் யாவரும் செந்தமிழ் மொழியையும், பண்பாட்டையும் பேணிப்பாதுகாக்கிறார்களா? என்பது விடையற்ற தேடலாகவே காணப்படுகிறது.

குறிப்பாக புலம்பெயர் ஆங்கில மற்றும் வேற்றுப்பண்பாட்டு கலாச்சார தேசங்களில் வாழும் இன்றைய தலைமுறையினர் தமிழர்களாக வாழ்கிற போதிலும், எதிர்கால தலைமுறைகள் தமிழர்களாக வாழ்வார்களா என்பது ஐயப்பாடாகவே உள்ளது.

இதனை நிவர்த்தி செய்ய இன்றைய தலைமுறையினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். கொரோனா வைரஸ் கற்பித்துள்ள இணையவழி கலந்துரையாடல்கள் தமிழர்களை மெய்நிகர் வழியில் இணைந்து கலந்துரையாட புது எண்ணங்களை உருவாக்கியுள்ளது.

இந்நிலையிலேயே, தூமி அமையமும் (இலங்கை) குறோளி தமிழ்க் கல்விக்கூடமும் (இங்கிலாந்து) இணைந்து நாளைய தலைமுறைக்கு ஓர் பாலம் அமைத்திட முதல் முயற்சியாக "வேரும் விழுதும் - மொழியால் இணைவோம்" இணைய வழி கலந்துரையாடல் ஒன்றை இரு வாரங்களுக்கு ஒருமுறை சனிக்கிழமைகளில் நடாத்தி வருகிறது.

**அடுத்த கலந்துரையாடல்,**

***காலம்: 03.10.2020, சனிக்கிழமை***
***நேரம் - மாலை 4.20 (இலங்கை) ;***
***மதியம் 11.50 (லண்டன்)***

***இணைய முகவரி***
***Join with Google Meet***
***meet.google.com/krp-otes-zna***

***தமிழ் பேசும் மாணவர்கள் இணைந்திடுங்கள்!!!***



சர்வதேச முதியோர் தினம் அக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு இந்த சிறுகதை பிரசுரிக்கப்படுகிறது.



# ஆதரவு

அஜந்தன்

அழைப்பொலி செவிவழி மூளைக்குள் நுழைந்து தூக்கத்தில் இருந்த ஆரூரனை தட்டி எழுப்பியது. கனவா நனவா என்ற குழப்பம் தீராமலே அலைபேசியை எடுத்தான். மறுமுனையில் இருந்து கிடைத்த செய்தியின் அதிர்வில் சில நொடிகளிலே முழு விழிப்புணர்வையும் அடைந்தான். இருந்தும் திரும்பவும் கேட்டு உறுதிப்படுத்திக்கொண்டு அவசர அவசரமாக புறப்பட்டு மோட்டார்பைக்கை எடுத்துக்கொண்டு அன்னை இல்லம் நோக்கி விரைந்தான்.

போகும் வழியெல்லாம் நினைவுகள் அவனை பாடாய் படுத்தின. அவனால் அவன் மனதை அமைதிப்படுத்த முடியவில்லை. கற்பனைகள் தாறுமாறாக ஓடியது. பல குழப்பங்கள் அவன் மனதை அல்லல்படுத்தி அலைக்களித்தது. பின்னோக்கி விரையும் மரங்களோடு அவனது நினைவுகளும் பின்நோக்கி நகர்ந்தது.

முனிவர்களின் தவக்காலம் போல் அது பட்டப்படிப்பு முடித்து வேலைக்காக காத்திருந்த காலம். மனச்சுமைகளோடும் தங்கி வாழ்கின்ற கனத்தோடும் நேரம் போகாமல் கண்டதையும் செய்து பொழுதுபோக்கிய காலம். அன்று காலையும் வழமையான சோம்பலான விடியலாகவே ஆரூரனுக்கு விடிந்தது. எழுந்தும் செய்வதற்கு ஏதுமில்லை என்ற எண்ணமே அவனை கட்டிலோடு கட்டிவைத்தது. அரைத்தூக்கத்தில் கிடந்தவனின் மனதை நேற்று பின்னேரம் சிவா அன்னை இல்லத்திற்கு போக வேண்டும் என்று சொன்னது நினைவுவரவே சோம்பலை புறந்தள்ளி விட்டு எழுந்து புறப்பட்டு சென்றான்.

அன்னை இல்லம் அழகான அமைதியான சூழலில் அமைந்திருந்தது. அதை பார்த்ததும் இயற்கை விரும்பியான ஆரூரன் உள்ளத்தில் உற்சாகத்தை அள்ளிக் கொடுத்தது. “மச்சான் சிவா வாழ்ந்த இப்படியான இடத்தில வாழனும்டா, என்ன வாழ்கைடா” அவன் சொன்னதை காதில் வாங்காது அவனது கையை பிடித்து இழுத்துக்கொண்டு அன்னை இல்ல பிரதான மண்டபத்திற்கு சென்றான் சிவா. அங்கு இவர்களை போலவே கழக உறுப்பினர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் முன்னிலையில் மேசையிடப்பட்டு உணவுப்பொதிகள் அடுக்கப்பட்டு இருந்தது. உறுப்பினர் ஒருவர் எல்லாவற்றையும் ஒன்று விடாமல் தமது புகைப்பட கருவிக்குள் பதிவெடுத்துகொண்டிருந்தார். அது போதாதென்று ஆளுக்காள் அலைபேசியை எடுத்து தமது இஸ்டத்திற்கு வெழுத்து வாங்கி கொண்டிருந்தார்கள். இவர்களை கண்டதும் கழக தலைவர்

“என்ன சிவா நீங்க பொறுப்பில்லாம இப்ப வாறீங்க நேரமாச்சுதெல்லோ” கடிந்து கொண்டார்.

அசட்டு சிரிப்போடு அவரை சாமாளித்துக்கொண்டு தமது உறுப்பினர்களோடு கலந்து கொண்டு முதியவர்களை அழைத்து வந்து வரிசையில் இருத்தும் பணியில் ஈடுபட்டான். அன்றுதான் முதல் முதலாக அங்கு வந்த ஆரூரனுக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சியை

கொடுத்தது. இளைஞர்கள் முதியவர்களை அன்போடு அழைத்து வந்து இருக்கையில் இருத்துவதும் அவர்களை பார்த்து அந்த வயதானவர்கள் முகத்தில் மலரும் மகிழ்ச்சியும் பார்க்கும் போதே பரவசத்தை கொடுத்தது. நிகழ்வுகள் வழமைபோல சம்பிரதாயங்கள் நடந்தேறி வாழ்த்துகள், பெருமைகள், நன்றிகள் பேசப்பட்டு வந்திருந்த முதியவர்களோடும் உணவுப்பொதிகளோடும் இணைந்து புகைப்படம் எடுக்கபட்ட பின் கடமை முடித்த திருப்தியோடு கலைந்து சென்றனர்.

சிவாவின் அழைப்பை ஏற்று ஆரூரனும் அங்கிருந்த முதியவர்களிற்கு உணவுப்பொதிகளை கொடுக்க ஆரம்பித்தான். அப்போது அவன் கொடுத்த உணவுப்பொதியை இரண்டு கைகளாலும் வாங்கி அவனைப்பார்த்து “நன்றி தம்பி ரொம்ப நன்றிப்பா நல்ல சுவையான சாப்பாடு தந்திருக்காயப்பா நீ நல்லா இருக்கனும்பா நன்றிப்பா” என்று பாட்டி ஒருத்தி நிற்காத நன்றிப்பெருக்கோடு அவனுக்கு திரும்ப திரும்ப நன்றி கூறிக்கொண்டிருந்தாள். அது ஆரூரனின் மனதில் சங்கடத்தை ஏற்படுத்தியது. பாட்டிக்கு நல்ல பசிபோல இங்க இவங்கள் ஒழுங்கான சாப்பாடு போடமாட்டாங்கள். என்று எண்ணிக்கொண்டு நகர்ந்தான். எல்லோருக்கும் கொடுத்து முடிந்ததும் அந்த பாட்டியை தேடி சென்றான். பாட்டி யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் சாப்பாட்டு பாசல் பிரிக்கப்படாமலே இருந்தது.

இதை பார்த்ததும் பசியோட இருந்த பாட்டி பார்சலை கூட பிரிக்காம இருக்காவே என்ற ஆச்சரியத்தோடு

“என்ன பாட்டி சாப்பிடலையா? இங்க சாப்பாடெல்லாம் ஒழுங்கா தாறாங்களா? வசதியெல்லாம் எப்படி? நல்லா கவனிச்சுக்கிறாங்களா?” அவசர அவசரமாய் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான்.

அவனைப் பார்த்து சிரித்த பாட்டி “வாப்பா, இப்படி இருப்பா” என்று தான் இருந்த வாங்கில் இடம் விட்டு கொடுத்தாள். நகர்ந்து செல்ல முடியாது தயக்கத்தோடு வாங்கின் நுனியில் உட்கார்ந்தான் ஆரூரன்.

மீண்டும் ஒருமுறை நன்றிப் பாவை தொடக்கத்தில் இருந்து பாடி முடித்த பாட்டி ஆறுதலாய் அவன் கேள்விகளுக்கு பதிலளிக்க தொடங்கினாள். “அதெல்லாம் ஒரு குறையும் இல்லப்பா இங்க நல்ல சாப்பாடு போடுறாங்கப்பா, பொழுதுபோக்க ரீவி இருக்கு, புத்தகம் இருக்கு, கிழமைக்கு ஒருக்கா டாக்ரர் வந்து சோதிச்சுட்டு மருந்தும் தந்திட்டு போவாரப்பா நல்லாதான்பா இருக்கன்” என்றாள். ஏதோ ஒரு குறையோடு தான் நிறைவாய் இருப்பதாய் சொல்வது போல இருந்தது அவனுக்கு. அப்போது “ஆரூரன் வாடா இனி சிறுவர் இல்லம் போகனும் நேரமாகுது வாடா” என்று சிவா அழைக்க அவனும் பாட்டியிடம் விடைபெற்றான். அப்போது பாட்டியின் கண்கள் இன்னும் கொஞ்சம் என்கூட இருக்க கூடாதா என கெஞ்சுவது போலிருந்தது அவனுக்கு. அவனுள் ஏதோ



ஒரு துக்கம் பரவியது. அவன் உடல் எடை கூடியது போல் உணர்ந்தான். இருந்தும் மறுபடி வருவதாய் பாட்டிக்கு உறுதியளித்து விடைபெற்றான். அப்போது தான் புரிந்தது அங்கிருப்பவர்களிற்கு வயிற்றில் பசியில்லை மனதின் தனிமைப் பசிபோக்க ஆதரவுக்காய் காத்திருக்கிறார்கள் என்பது.

மாலை கழகத்தின் செயற்றிட்டங்கள் நிறைவேற்றிய திருப்தியுடன் திரும்பி சிவாவும் ஆரூரனும் அன்னை இல்லம் வழியாக வரவேண்டி ஏற்பட்டது. அன்னை இல்லத்தை பார்த்ததும் ஆரூரனுக்கு பாட்டியின் ஞாபகம் வந்தது. அவள் கண்களில் தெரிந்த ஏக்கம் அவனை அந்த இடத்தை கடந்து போகதபடி தடைபோட்டது.

"என்ன மச்சி அதுக்குள்ள உனக்கு வயசாகிடிச்சா இங்க வந்து குடியேற நிக்குறாய்" சிவாவின் நையாண்டியை பொருட்படுத்தாது அன்னை இல்லத்துள் பாட்டியை தேடிச் சென்றான் ஆரூரன். அங்கு அவன் பார்த்த காட்சி அவனை மேலும் சங்கடப்படுத்தியது. அதேவாங்கில் பிரிக்கப்படாத சாப்பாட்டு பார்சலோடு பாட்டி அவன் வருவான் என எதிர்பார்போடு காத்திருப்பதுபோல் இருந்தது. அவனை கண்டதும் கனிவான புன்னகை மலர வாஞ்சையோடு அவனை அழைத்து அருகே இருத்திக்கொண்டாள்.

"என்னப்பா உங்க வேலை எல்லாம் முடிஞ்சுதாப்பா" வினாவிற்கு மனதில் கனத்தோடு "ம்ம்ம்" கொட்டினான். பாட்டி சிரித்துக்கொண்டே தொடர்ந்தாள். "இங்க உங்களப் போல சின்னப்பிள்ளைகள் லீவு நாட்களில வருவாங்கள். அவங்களை பாக்கும் போது என் பேரப் பிள்ளைகளை பார்கிற சந்தோசம் வரும். இல்லன்னா இந்த மரத்தடியும் இங்க சுத்திட்டு இருக்கிற அணிலும்தான் எனக்கு துணை" என கூறி கன்னங்களின் சுருக்கங்களையும் மீறி அழகாய் சிரித்தாள் பாட்டி.

"உங்களுக்கு பிள்ளைகள் இருக்காங்களா பாட்டி?" ஆச்சரியத்தோடு வினாவினான் ஆரூரன்.

"ம்ம்ம்" தலையாட்டியபடி ஆழ்ந்த யோசனையோடு பதில் சொல்லத் தயாரானாள்.

"அவங்கள் எல்லாம் இங்கதான் இருந்தாங்க இப்ப ஜெர்மன், கனடால இருக்காங்கப்பா. அந்தகாலத்தில மண்டதீவில பெரிய விவசாயி சொத்துப்பத்துகாரர் எங்கட அப்பர். பள்ளிக்கூடம் போறதே பெரிய விசயமா பாக்கப்பட்ட காலத்தில என்னை மானிப்பாய் மகளிர் கல்லூரி கொஸ்டல்ல விட்டு படிப்பிச்சார். கொஸ்டல்லுக்கு போறதுக்கு வண்டில ஏத்தி விட்டுட்டு மண்டதீவு சந்திவரைக்கும் பின்னாலையே நடந்து வருவர் அந்த மனுசன்" ஏக்கம் கண்ணில் மின்ன பெருமூச்சு விட்டாள் பாட்டி. அவளையே உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்தான் ஆரூரன்.

"படிச்சு முடிச்சு ரீச்சரா வேலை பார்த்தன். பிறகு கடை வச்சிருக்கிறவருக்கு என்னை கட்டி வச்சாங்க. அவங்க வேலைக்கு போகாம நிப்பாட்டிடாங்க. இரண்டு ஆணும் ஒரு பொண்ணுமா மூணு பிள்ளைங்க பிறந்தாங்க. சந்தோசமாதான் இருந்துசு தம்பி, இனப்பிரச்சனையும் இடப்பெயர்வும் ஆரம்பிச்சுது. எல்லாம் போச்சு. பிள்ளைகளையும் தூக்கிட்டு மாறி மாறி அலஞ்சம். செல்லடில அவரும் போக சின்னப்பிள்ளைகளை வச்சுட்டு செரியா கஸ்டப்பட்டன். எண்ட அண்ணாட உதவியோட வயல் வேலை, கூலி வேலைனு செய்து ஒருமாதிரி பிள்ளைங்கள நல்லபடியா வளர்த்திட்டன். கண்முன்னை இல்லாட்டியும் இப்ப எங்கையோ நல்லபடியா இருக்கிறாங்க" பல வருச கஸ்டங்களையும் துயரங்களையும் சில நிமிடத்தில் சொல்லி முடித்து பெருமூச்சு விட்டாள்.

பாட்டியின் சோகம் தன்னுள் வாங்கி சிலையாக சில நொடி அமர்ந்திருந்த ஆரூரன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு "ஏன் பாட்டி எல்லாரும் வெளிநாட்டுக்கு போனவை? உங்களோட ஒராளாவது இருந்திருக்கலாம் தானே?" கேள்விகள் தொடுத்தான்.

கனவில் சிரிப்பதுபோல் அசுவாரசியமாக சிரித்த பாட்டி "மூத்த பெடிய சுட்டதால கடசிப் பொடியன் பயத்தில கப்பலால இந்தியாக்கு போய்ட்டான். அவனும் அங்க முகாமில இருக்கேக்க இங்க வயசுக்கு வந்த பெட்டய வச்சுட்டு கல்யாணம் கட்டி குடுக்க அலஞ்சன். இங்க இருக்கிறவங்க கேக்கிற சீதனம் குடுக்க என்கிட்ட ஏதப்பா வசதி. அப்பதான் கனடால இருந்து சீதனம் வேண்டாம், பொம்பிள்ளை வடிவா இருந்தா போதுமெண்டு சம்மந்தம் வந்திச்சு. ஒருமாதிரி இருந்த காணி, பூமிய வித்து அந்த சம்மந்தத்தை முடிச்சு பெட்டையை வெளிநாட்டுக்கும் அனுப்பி வச்சன். அவள் போய் தம்பியாரையும் கூப்பிட்டாள். அவன் இப்ப ஜேர்மன் பொம்பிளையை முடிச்சு பிள்ளை குட்டியோட நல்ல இருக்குதுகள்" கற்பனையின் சந்தோசம் கண்களில் மின்ன நிமிர்ந்தாள் பாட்டி.

"ஏன் பாட்டி உங்களுக்கு வீடு இல்லையா?" கதைகேட்கும் ஆவலோடு அடுத்த வினாவை தொடுத்தான்.

□மண்டதீவு வீடு பிரச்சனையளுக்குள்ள தரைமட்டம் ஆச்சு. இங்க மானிப்பாய்ல வாடகைக்கு தான் இருந்தன். பிள்ளையளும் இல்லாம தனியா இருக்க பயமா இருந்திசு. பிள்ளையள்ட சொல்லிட்டு இங்க வந்திட்டன். இல்லத்துக்கு போகப் போறன் என்டு சொல்லவே பேசினாங்க. புதுசா வீடு வாங்கித்தாறம் நீங்க இருங்கோ என்டாங்க. எனக்கெதுக்குப்பா வீடு. வாயசான காலத்தில எங்கள பாக்கிறதே பெரிய பாடா கிடக்கு இதுக்குள்ள வீடு வாசல பராமரிக்க முடியுமோ? நான் வேண்டாமென்டு பிடிவாதமா வந்திடன். கடசி போனில அழுது கெஞ்சினான். அவன் அழும்போது மனசு கேக்கல அவன் அவ்ளோ பாசம் என்னில. பள்ளிக்கூடம் போகும் போது நானும் அவனோட போய் இருக்க வேணும். பெரிய பொடியனா வளந்த பிறகும் தூங்கிறதுக்கு நான் பக்கதில வேணும் அவனுக்கு. என்னதான் சாப்பிடாலும் நான் சாப்பிடும் போதும் வந்துநிப்பான். என் கையால அவனுக்கு ஊட்டிவிட்ட பிறகுதான் நான் சாப்பிடுவன். ம்ம்ம் என்ன பண்ண இப்ப அவங்களுக்கும் பிள்ளைங்கள் வளந்திடாங்கள். அதுகளை ஒருமுறை பத்திடனும் தம்பி" கண்கலங்க கண்ணீரை வொயில் சேலை தலைப்பில் ஒற்றி எடுத்தபடி சுருக்கம் விழுந்த உதட்டோரம் லேசாக புன்னகையை வரவழைத்துக கொண்டு ஆரூரனை பார்த்தாள் பாட்டி.

சிந்தனைகள் அவனை குழப்ப "ஓஓஓ" என்ற அழுத்தமற்ற முனகலோடு பாட்டியின் வாழ்க்கைக்குள் இருந்து வெளியில் வந்தான். நேரத்தை பார்த்தபடி "நேரமாச்சுப் பாட்டி நான் வெளிக்கிடப்போறேன். அதுசரி உங்க பேரென்ன?" அவசரதோடு எழுந்தவன் பாட்டியின் பெயரை அறியும் ஆவலோடு நின்றான். கொஞ்ச நேரம் தன்னை மறந்து சிரித்த பாட்டி "சரிதான் மோனே பேர் தெரியாமலா கதச்சனி. அந்த காலத்தில ஊருக்க ஆர் புதுசா வந்தாலும் பரம்பரை வரைக்கும் விசாரிப்பம் இப்ப எங்க உங்களுக்கு நிண்டு கதைக்கவே நேரமில்லையேபா" என்றாள் சிவகாமி பாட்டி.

பாட்டியின் வழியனுப்புதல்களோடு திரும்பவும் வருவேன் என்ற உறுதிமொழியோடும் விடைபெற்றான். அன்றிலிருந்து வாராவாரம் கோயிலுக்கு போவது போல் ஞாயிற்றுக்கிழமைகளில் சிவகாமி பாட்டியை சந்திப்பது ஆரூரனின் வழக்கமாகிப் போனது. பலகதைகள் பேசி அனுபவங்கள் பரிமாறி அன்போடு அவர்களது உறவு பிணைப்பு உருவாகி பாட்டி என்று அழைத்தவன் சிவகாமி என்று ஒருமையில் பாசத்தோடு அழைக்கும் அளவிற்கு இறுக்கமாகி இன்றுவரை தொடர்ந்தும் வருகின்றது.

"எல்லாம் நல்லாத்தானே இருந்திசு போனகிழமை கூட போய் பார்க்கும் போது பாட்டி நல்லாத்தானே இருந்தாங்க என்னாச்சு நிர்வாகி சீரியஸ் என்று போன் பன்றாங்க. கடவுளே! பாட்டி நல்லா இருக்கனும் வாற மாதம் பிள்ளைகள் வாறம் எண்டு சொல்லியிருக்காங்க. அதுவரைக்கும் ஏதும் ஆகக் கூடாது" ஆலயங்களே போய் அறியா ஆரூரனின் பலத்த வேண்டுதல்களோடு அன்னை இல்லைத்தை அடைந்தான்.

வாசலில் இறங்கும் போதே அவனது மனம் பதைபதைத்தது. இருதயத் துடிப்பு எகிறியது. நடக்க தடுமாறிய கால்களை கஸ்டப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து வரவேற்பறையை அடைந்தான். அங்கு அவனுக்கு முன்னரே சிவகாமி பாட்டியின் உறவினர்கள் குழுமியிருந்தனர். பலர் அலைபேசியும் கையுமாக அவசரப்பட்டு அலைந்து கொண்டிருந்தனர். கூட்டத்தை விலக்கி பாட்டியின் அறைவாசலை அடைந்தான். அவனை கண்ட நிர்வாகி துக்கம் நிறைந்த குரலோடு "வாப்பா" அழைத்து சென்றார். அங்கு சிவகாமி பாட்டி வாழ்கையின் சோகங்கள் களைந்து நிரந்தரமாய் நிம்மதியான உறக்கத்திற்கு சென்றிருந்தாள். அவளது வலது கையில் பிள்ளைகளின் பழைய புகைப்படம் கசங்கிக் கிடந்தது.

"என்ன எண்டே தெரியல தம்பி சத்தம் சாவடி இல்லாம போய்டா. விடிய துப்பரவாக்க வந்த பிள்ளைதான் செல்லிச்சு பாட்டி ஒருமாதிரி இருக்கானு. நானும் டொக்ரறக் கூப்பிட்டுப்பார்த்தன். சீவன் இரவே போய்ட்டு என்டார்" நிர்வாகி சம்பவத்தை விளக்கிக்கொண்டிருந்தார். எதுவும் ஆரூரனின் காதோடு நின்று கொண்டது மூளையை எட்டவே இல்லை. அவன் மனம் பேரமைதியுள் ஆழ்ந்து போயிருந்தது. அங்கு நிலை கொள்ள முடியாமல் பின்வாங்கி அறையின் வெளியே வந்தான். "தம்பி சொல்லிடான் எல்லாம் நல்லபடியா நடகனுமாம். அம்மா ஆசைப்பட்டமாதிரி ஒரு குறையும் இல்லாம சிறப்பா இறுதிச் சடங்கு இருக்கனும், என்ன செலவானாலும் பறவாயில்லை எண்டுடான். என்ன வர மூனுநாள் ஆகுமாம் அதுதான் என்ன பண்றதென்று தெரியல" உறவுகளின் உரையாடல் காதில் விழுந்து வேதனை மிக்க சிரிப்பை உண்டாக்கியது ஆரூரனுக்கு.

அங்கிருந்து மெதுவாக வெளியேறி மோட்டார் பைக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் கண்கள் ஓரத்தில் காயாத ஈரத்துளிகளையும் மனதின் ஆழமான துயரத்தையும் மீறி ஏதோ ஒரு நிம்மதியும் ஆத்மதிருப்தியும் அவனுள் குடியேறி இருந்தது.




**இவ்விதழில் படம் சொல்லும் கதை**

# பெண்களே நூலகம் கண்களே புத்தகம்

அண்டசராசரத்தில் உயிர்களின் நிலவுகைக்கு உரிய அம்சங்களை கொண்ட ஒரே கோள் பூமி ஆகும். பூமியில் முதலாவதாக தோன்றிய உயிர் பக்றீரியா. இற்றைக்கு நான்கு பில்லியன் வருடங்களுக்கு முன்பாக கடலுக்கடியில் தோன்றியதாக விஞ்ஞானம் சொல்கிறது. பக்றீரியா படிப்படியாக கூர்ப்பு நிலைகளை கடந்து சிக்கலான உயிரினங்களாக உருமாறி முதல் மனிதன் இன்றைக்கு 1.8 மில்லியன் வருடங்களுக்கு முதல் உலகத்தில் தோன்றினான். மனிதனின் பரிணாம வளர்ச்சியில் சிக்கலான நரம்புத்தொகுதி தோன்றியது. மனித உடலின் செயற்பாடுகளை இயக்கும் முக்கிய அங்கமாக மூளை உருவானது. மனித உடலின் செயற்பாடுகள் இயற்கையின் தூண்டல்களுக்கு துலங்கும் விதமாக, இயற்கையோடு ஒன்றிணைந்த மனிதனின் நிலவுகைக்காக விஷேட வாங்கிகளாக புலன் அங்கங்கள் விருத்தியாயின.

இ.தனிஷ்ரன்

தொடுகைக்கு தோல்
நாற்றத்துக்கு நாசி
கேட்க காது
நாற்சுவைக்கு நாக்கு
மற்றையது

"கண்
இல்லையென்றா
லோ
நிறம் பார்க்க
முடியாது
நிறம் பார்க்கும் உன்
கண்ணை
நீ பார்க்க முடியாது"

புலனங்களில் முதலானதும் முக்கியமானதுமான கண்!



தாயின் கருப்பையில் சிசு வளர்ச்சியின் மூன்றாவது கிழமையில் உருவாக ஆரம்பிக்கும் கண், பத்தாவது கிழமையில் முழுதாக உருவாகிவிடும். விழிவெண்படலத்திலிருந்து விழித்திரை வரை நீளும் கண்ணில், படும் ஒளி விழிவெண்படலத்தினாலும் கண்



வில்லையினாலும் முறிக்கப்பட்டு விழித்திரையில் தலைகீழ் விம்பம் விழுத்தப்படும். விழும் விம்பம் விழித்திரையில் இரசாயன மாற்றங்களை தூண்ட நரம்புக் கலங்கள் அருட்டப்பட்டு பார்வை நரம்பு மூலம் செய்தி மூளைக்கு கடத்தப்படும். மூளை பொருளின் வடிவத்தை இடத்தை அழகை உணரும்.

"கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா
கண்களுக்கு சொந்தமில்லை"

புறத்தை பார்த்து ரசிக்க மட்டுமன்றி அகத்தின் அழகை முகத்தில் பிரதிபலிப்பதும் வதனத்திற்கு வனப்பான வடிவத்தை கொடுப்பதும் விழி தான். முகத்தின் அத்தனை உணர்வுகளையும் சரியாக கடத்துவதும் கண்

ரசிக்கும் சீமானே

தான். சிரித்தால் சிரிக்கும், கோபித்தால் கோபிக்கும், அழுதால் அழும். ரசித்தால் ரசிக்கும். உலகமும் உணர்வுகளும் கண்ணினுள்ளேயே அடக்கம்.

"கண்ணில் காட்சி தோன்றி விட்டால் கற்பனை தீர்ந்து விடும்
கண்ணில் தோன்றா காட்சியில் தான் கற்பனை வளர்ந்து விடும்"



கண் என்றாலே அழகென்றால், உலகின் ஒட்டுமொத்த அழகும் ஒரு சேர அமைந்த பெண் எனும் அழகுக்கு தனித்துவ அடையாளமாகி மேலும் அழகை கூட்டுவதும் மெருகூட்டுவதும் இதே கண் தான். அம்புவிழி, அல்லிவிழி, மான்விழி, கயல்விழி, காந்தகண்ணழகி என்று பெண்ணின் கண்ணை கொண்டாடாத கவிஞனும் இல்லை காதலனும் இல்லை.

"விழியில் உன் விழியில் வந்து விழுந்தேன்
அந்த நொடியில் என் எதிர்காலம் நீ தான் என்று உயிர் சொன்னதே"

என பல இளைஞர்கள் யுவதிகளே கதியென அலைவது, பெண்ணின் வேல்விழி எறியும் கூர்மையான பார்வையில் மயங்கித்தான்.

"கள்ளூற பார்க்கும் பார்வை உள்ளூற பாயுமே
துள்ளாமல் துள்ளும் உள்ளம் சல்லாபமே
வில்லோடு அம்பு ரெண்டு கொல்லாமல்
கொல்லுதே பெண் பாவை கண்கள் என்று
பொய் சொல்லுதே"



பெண்ணினது பார்வை தூண்டிலில் சிக்கிய மீனாய் துடித்துப்போகும் ஆண் மனம். அதை விரும்பி விரும்பி மீண்டும் அதையே செய்யும்.

"தேவதை கண்ணில் இரு தூண்டிலை
பார்த்தேன் மாட்டிய மீனாய் நான் ஆனேன் ஆனேனே"

பெண் எனும் பேரழகை ரசிக்க வைத்து "காதல்" என்ற பந்தத்தை வளர்த்து விடுவதில் கண்களின் பங்களிப்பு அதிகம். அவளின் விழியீர்ப்பு விசையில் விழுந்து விறகாகி எரிந்து அவளே கதியென்றி சித்தம் கலங்கி பைத்தியமாவதற்கு பேர் காதலென்றால், அந்த காதலுக்கான காரணகர்த்தா அவ்விருவரின் விழிகளே!

அண்ணலும் நோக்க அவளும் நோக்க,



"கண்கள் எழுதும் இரு கண்கள் எழுதும் ஒரு வண்ண கவிதை காதல் தானா"

என மலரும் புது பந்தம்.

"பாயுமொளி நீயெனக்கு பார்க்கும் விழி நானுக்கு..."
என்று பாரதி தொடக்கி வைக்க,


“கண்கள் ரெண்டும் அணுகுண்டா
கத்தி கொண்ட பூச்செண்டா
இன்பமான சிறை உண்டா
ஈர விழியில் இடம் உண்டா"

என காதலன் தவிப்பு காலங்கள் கடந்தும் நீள்கிறது.

அவளது பார்வையொளியிலே தான் இவன் காதல் வாழ்கிறது. உண்ண உணவு, சுவாசிக்க காற்று இருந்தால் சாதாரண மனிதன் உயிர் வாழலாம். ஆனால் காதல் கொண்டவன் உயிரோ காதலி கண்களில் உசலாடிக்கொண்டிருக்கும். இந்த நிலையில் அவளை பார்ப்பது ஒன்று தான் இவனது உயிருக்கு உரமூட்டுவது.

"காதலே வாழ்க்கையின் வேதம் என்று
ஆனதே
கண்களால்
சுவாசிக்க கற்று
தந்தது"

"அணுசக்தி
பார்வையில்
உயிர்சக்தி தந்தாய்"



வாழ்வின் ஆதாரம்!
உயிர்சக்தி!

"மின்மினி பிடித்து மின்மினி பிடித்து
கண்களில் பதித்து கண்களில் பதித்து
கண்மணி கண் பறித்தாள்"

காதலியை கொஞ்சும் இன்னொரு சொல் கண்மணி. உண்மையில் கண்மணி என்பது கதிராளியினூடாக கண்ணினுள் ஒளி செல்லும் சிறு துவாரம். ஒன்றுமே இல்லாத வெளி தான் கண்மணி. கண்மணியினூடாக ஒளி கண்ணினுள் சென்றால் தான் காட்சி தோன்றுவது போல பெண்ணோடு சேரும் பொழுது தான் இவன் வாழ்க்கை அழகாகிறது.

"ஒரு கண்ணில் அமுதம் கண்டேன்
மறு கண்ணில் அமிலம் கண்டேன்
எங்கெங்கோ தேடித்தேடி உன்னில் என்னை
நான் கண்டேன்"

அவள் காதலாய் பார்க்கும் பொழுது ஒரு பார்வை, கோபமாய் பார்க்கும் போது ஒரு பார்வை, சிரிக்கும் போது ஒரு பார்வை, சிணுங்கும் போது ஒரு பார்வை... இப்படி பார்வையை மாற்றி மாற்றி வாள்ச்சமர் இன்றி விழிச்சமர் செய்து ஆணை கொலை செய்வதில் அவள் கெட்டிக்காரி.

"கண்களிலே பௌத்தம் பார்த்தேன்
கன்னத்தில் சமணம் பார்த்தேன்
பார்வை மட்டும் கொலைகள் செய்ய
பார்க்கிறேன்"

சாதாரண மானிடன் முதல் விசுவாமித்திரன் போன்ற யோகிகள் வரை பெண்ணின் காந்த கண்ணில் அதன் வாள்வீச்சின் கூர்மையில் கிறங்கிப்போகாதவர்கள் வையகத்தில் வாய்க்கப்பெறவில்லை.

"கடவுள் பூமி வந்தால்
உன் கண்ணை பார்க்க வேண்டும்
மனிதன் பாவம் என்று
அவன் மறைந்து போக வேண்டும்"

மனிதன் இந்த உலகில் வாழ்வதற்கு எவ்வளவு கண் முக்கியமானதோ அதே கண் தான் அவனது வாழ்க்கைக்கு ஆதாரமாய் காதலையும் கொண்டு வருவது. காதலன் கண்ணில் தன் விம்பத்தை காதலியும் காதலி கண்ணில் தன்னை காதலனும் காணும் போது வாழ்க்கை காதல் முழுமையாகிறது; பரிபூரணமடைகின்றது.

"கண் கொண்டு தன் கண்ணை
கண்டவர்கள் கிடையாது
என் கண்ணை காணுகிறேன் இமை
ரெண்டும் அசையாது"



## சமூகத்தொகுதியும் அதன் ஆக்க அலகுகளும்




**1. சமூக அந்தஸ்து (Social status)**

சமூக அந்தஸ்த்து எனப்படுவது பொருளாதார சமூக அமைப்பியல் ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் ஆகும். வழுக்கியாற்று சூழற் தொகுதியை நோக்கும் போது இங்கு சமூக அந்தஸ்து என்பது முக்கிய இயங்கு பொருளாக காணப்படுகின்றது. இங்கு பிறவிசார் அந்தஸ்து(Ascribed status), பெற்றுக் கொள்ளப்பட்ட அந்தஸ்து(Achieved status) என்பன நடைமுறையில் உள்ளன.

பெரும்பாலும் பிறவிசார் அந்தஸ்து எனும் பொழுது சாதி முறைமை வழக்கத்தில் காணப்படுகின்றது. இது ஆதிகாலத்தில் மிக இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டாலும் தற்காலத்தில் சிறிது தகர்வடைந்து காணப்படுகின்றது. சாதி அமைப்பில் உயர் சாதி வர்க்கம், நடுச்சாதி வர்க்கம, தாழ் சாதி வர்க்கம் என மூன்று பிரதான வகையை இனம் காணலாம். இப்பிரதான சாதிப்பிரிவினுள் பல சாதிப்பிரிவுகளையும் உப மற்றும் கிளைச்சாதிப்பிரிவுகளையும் அவதானிக்க முடிகின்றது.

தற்காலத்தில் நடைமுறையில் உள்ள அந்தஸ்தானது பெரும்பாலும் வாழ்வாதாரத்தின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அந்தஸ்தாக காணப்படகின்றது. இதனை நாம் விவசாயிகள், விவசாயக்கூலிகள், விவசாயம் சம்பந்தப்படாத வேலை செய்வோர் என மூன்று வகைப்படுத்தலாம்.

**2. சமூக பங்கு (Social role)**

கிராமத்தவர்கள் வலுவான சமய நம்பிக்கைகளுக்கு உட்பட்டு வாழ்கின்றனர். இங்கு வாழும் பெரும்பாலானவர்கள் இந்து சமயத்தை பின்பற்றுவதுடன் சிறுபான்மையான மக்கள் தொகையினர் கிறிஸ்தவ சமயத்தை பின்பற்றுகின்றனர். இந்துக் கோயில்கள் விவசாயம், இயற்கை வளப்பயன்பாடு மற்றும் மக்களின் வாழ்வியலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இங்கு கோயில்களை மையமாகக் கொண்ட சமூக குழும குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. இவர்கள் இரத்த உறவினர்களாக உள்ளதுடன் கிராமிய வழக்கில் சொந்தக்கார்கள் எனக் கொள்ளப்படுகின்றனர். உறவினர் குடியிருப்புக்கள் ஒன்று சேர்ந்து ஒத்த சாதிய குடியிருப்புக் குழுமங்களை தோற்றுவிக்கின்றன. அத்துடன் ஒவ்வொரு சாதியக் குடியிருப்புக்களும் தனித்தனி குழுமமாக காணப்படுகின்றன. சாதிய ரீதியிலான சில சமூக விதிமுறைகள் கிராமத்தவர்களால் கைக்கொள்ளப்படுகின்றது.



குடியிருப்புப்பகுதியில் வேலிகளால் எல்லையிடப்பட்ட வீடுகளும் நிலங்களும் காணப்படுகின்றன. இவ்வேலிகள் ஒவ்வொரு குடும்பக் குடிகளையும் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபடுத்துகின்றன. ஆரம்ப காலத்தில் இவ்வேலிகள் எல்லைக் கதிகால்கள் எனப்படும் வேலிமரங்களால் எல்லையிடப்பட்டு பனை ஓலை, பனை மட்டை மற்றும் தென்னை ஓலையில் இருந்து செய்யப்படும் கிடுகு என்பனவற்றால் அடைக்கப்பட்டு வந்தாலும் தற்போது பெரும்பாலும் உலோக கூரைத்தகடுகள் பனை ஓலை, பனை மட்டை மற்றும்

தென்னை ஓலையில் இருந்து செய்யப்படும் கிடுகு என்பவற்றிற்கு பதிலீடாக பயன்படுத்தப் படுகின்றன. எல்லைக்கதிகால்களுக்கு பதிலீடாக கொங்கிரீட் தூண்களும் முட்கம்பிகளும் பயன் படுத்தப்படுகின்றன. சில இடங்களில் கொங்கிரீட் மதிற் சுவர்களும் அமைக்கப்படுகின்றன.



விவசாய நடவடிக்கைகளில் ஆண்களும் பெண்களும் சமமான பங்கினை வகிக்கின்றனர். இதனை அறுவடைக்கு முந்திய மற்றும் அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவத்தில் உள்வாங்க முடியும்.

பெண் தொழிலாளர்கள் பெரும்பாலும் நீர்ப்பாசனம், அறுவடை, களைபிடுங்குதல், நாற்று நடுதல், பசளையிடல் போன்ற வேலைகளில் ஈடுபடுவதுடன் ஆண் தொழிலாளர்கள் முதல் மற்றும் துணை நிலப்பண்படுத்தல், நீர்ப்பாசனம், கிருமிநாசினி மற்றும் பசளைப்பிரயோகம், அறுவடை, பொதியிடல் போன்ற வேலைகளில் பெரும்பாலும் ஈடுபடுகின்றனர்.

பெரும்பாலும் தினக் கூலியாக பெண் தொழிலாளர்கள் 800 ரூபாயையும் ஆண் தொழிலாளர்கள் 1200 ரூபாயையும் பெறுகின்றனர். இது பால்நிலை சமத்துவம் இன்மையாகத் தோன்றினாலும் ஆண்கள் பெண்களை விட வலுக் கூடிய வேலைகளை செய்யக்கூடியதாக இருப்பதால் ஆண்களுக்கு கூடிய தினக்கூலி வழங்கப்படுவதாக கிராமவாசிகள் குறிப்பிடுகின்றனர். இதற்கமைய உழைப்பிற்கான ஊதியமே வழங்கப்படுவதனால் இங்கு பால் நிலைச்சமத்துவம் பேணப்படுவதாகக் கொள்ளமுடியும்.

(ஆறு ஓடும்)

---



## தும்யோடு பிறந்தநாள்!!!

*சக்திதர்ஷினி சந்தானகுமாரன் அவர்கள் தனது புதுஅகவையில், தும்மி அமைப்பின் ஊடாக வறிய நிலையிலும் கல்வியை ஊக்கமாக கற்கும் மாணவியின் கற்றல் பயணத்தை இலகுபடுத்தும் வகையில் துவிச்சக்கர வண்டியை கற்றலுக்கான ஊக்க அன்பளிப்பாக மகிழ்ந்திருந்தார்.*

*அன்ன யாவினும் புண்ணியங் கோடி ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்..!*

# குடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உபாயமுறைகள் 7

அதிரன்

## நிலாவரை



இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கும் ஒரு கிராமமாகும். இந்த இடத்தில் இயற்கையாக அமைந்த நிலக்கீழ் நீர்க் கிணறு ஒன்று இருப்பதனால் பிரசித்தி பெற்ற இடமாக இருக்கிறது. இந்தக் கிணற்றின் ஆழத்திலே “நிலாவரை“ (நிலா வரைக்கும்) என்று கூறிவந்து, அதுவே இந்த இடத்தின் பெயராகவும் அமைந்துவிட்டது. இந்தக் கிணற்றில் நீர் என்றும் வற்றாமல் இருப்பதுடன், அருகிலுள்ள வேளாண்மைக்கு நீர்ப்பாசன உதவி வழங்கும் இடமாகவும் இருக்கின்றது.

## புறாக்கூடு

தீவகப் பகுதியில் காணப்படும் மரபுரிமைசார் சுற்றுலாப் பகுதியகளில் புறாக்கூடு முக்கியமானதொன்றாகும். நெடுந்தீவில் ஒல்லாந்தரது ஆட்சியைச் சிறப்பாக அடையாளப்படுத்தும் ஐரோப்பியர்கால மரபுரிமைச் சின்னங்களில் இன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாக



விளங்குவது பறவைகள் சரணாலயமெனப்படுகிறது. இவ்வமைப்பானது ஒல்லாந்தராட்சி நடைபெற்ற இலங்கையில் அவர்களால் கட்டமைக்கப்பட்ட கட்டட அமைப்புக்களில் நெடுந்தீவைத் தவிர வேறு எந்தப் பகுதிகளிலும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்புறாக்கூடானது நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் பிரதான கட்டடத்துக்குத் தெற்கே அமைந்துள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் குறிப்பாக கி.பி 1602 தொடக்கம் கி.பி 1796 இற்கிடைப்பட்ட காலப்பகுதியில் கட்டப்பட்டதாகச் சான்றுகள் கூறுகின்றன. இக்கூடு காணப்படும் பிரதேசம் ஐரோப்பியர் காலத்தில் நிர்வாக, இராணுவ ரீதியில் முக்கியம் பெற்றதாகக் காணப்படுகிறது. ஆதிகாலத்தில் தகவல் தொடர்பாடலுக்குப் புறாக்களும் பயன்படுத்தப்பட்ட வரலாறுகள் உண்டு. எனவே, ஒல்லாந்தரால் கட்டப்பட்ட இதன் கலைமரபையும், தொழில்நுட்ப அறிவையும், அதனமைப்பையும் நோக்கும் போது இக்கூடு புறாக்கள் வாழ்வதற்கேற்ற வகையில் உள்ளதனால் புறாக்கூடு என அழைக்கப்படுகிறது.

## வெளிச்சவீடு

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கையானது இந்தியாவுடனும் கிரேக்க, ரோம, அராபியா மற்றும் தென் கிழக்காசியா, கிழக்காசியா போன்ற நாடுகளுடனும் கொண்ட உறவின் காரணமாக கடல் வழித் தொடர்புகளும் வர்த்தகப் பண்பாட்டு உறவுகளும் அதிகரிக்கலாயின. இத்தொடர்புகளை பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களிலும் பிறநாட்டார் குறிப்புக்களும், கடற்கரை

நகரங்கள், வர்த்தக மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தொல் பொருட்சான்றுகளும் ஆதாரப்படுத்துகின்றன. அக்காலத்தில் கடல்வழித் தொடர்புகளிலும் கடல்கடந்த வணிகத்திலும் தோணி, பாய்க்கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. இவை திசைமாறாது குறிப்பிட்ட இடத்தை அடைவதற்காகத் துறைமுகத்தின் ஓர் குறிகாட்டியாக வெளிச்சவீடு காணப்படுகிறது. இது பண்டையகாலத்திலே இருந்தது என்பதற்கு இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தில் “இலங்கு நீர் வரைபில் களங்கரை விளக்கம்” எனக் குறிப்பிட்டத்திலிருந்து ஆரம்ப காலங்களிலே முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பது புலனாகிறது.



### பெருக்கு மரம்

இம்மரம் நெடுந்தீவின் கிழக்கு பகுதியில் காணப்படுகிறது. இம்மரம் பல நூறு வருடங்களுக்கு மேற்பட்டதென கூறப்படுகிறது. இதன் அடி மரம் மிகவும் விசாலமானது. இதன் பூக்கள் வெண்மை நிறமாகவும் காய்கள் வட்ட வடிவ பச்சை நிறமாகவுமுள்ளன. இத்தகைய மரங்கள் இலங்கையில் மிகச் சிலவே உள்ளன என கூறப்படுகிறது. இம் மரங்கள் இஸ்லாமியரால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதென நம்பப்படுகிறது இவை இன்று காலநிலை மாற்றங்களால் அழிந்துகொண்டு செல்கின்றன என கூறப்படுகிறது.
நெடுந்தீவில் இருக்கும் பெருக்க மரம் எனப்படும் இம் மரம் தான் யாழ் மாவட்டத்திலேயே மிகப் பெரிய சுற்றளவான மரம். அதே நேரம் தென்னாசியாவின் இரண்டாவது பெரிய சுற்றளவான மரமும் இதுதான். ஒல்லாந்தர்கள் நெடுந்தீவின் கேந்திர முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்தக் கடலின் வல்லாதிக்கத்தை நிலை நிறுத்த முனைந்த பல தேசங்களின் ஆக்கிரமிப்பாளர்களும், வியாபாரிகளும் வந்து சென்ற, வாழ்ந்த இடமாகவும், குதிரைகளுக்கு உணவாகவும், மருத்துவத் தாவரமாகவும் தொன்ம அடையாளப் பரம்பலை விபரித்துச் செல்லும் மரமாகவும் பெருக்குமரம் காணப்படுகிறது.

இம்மரம் நெடுந்தீவின் கிழக்குப்பகுதியில் ஜெற்றியிலிருந்து தென்மேற்காக 3km தொலைவில் காணப்படுகிறது.
ஒல்லாந்தர் காலக் கேணிகள்
நெடுந்தீவில் ஐரோப்பியர்கால மரபுரிமைச் சின்னங்களில் ஒல்லாந்தர்களால் கட்டமைக்கப்பட்ட கிணறுகள் அல்லது கேணிகளும் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் அதிவரண்ட பிரதேசமான நெடுந்தீவு நீண்டகாலம் வரட்சியாகவே காணப்படும். எனவே, குதிரைகள், மாடுகள், தண்ணீர் குடிப்பதற்காக ஏராளமான கேணிகள் ஒல்லாந்தர்களால் கட்டப்பட்டதென்ற குறிப்புக்கள் உள்ளன. குதிரை மூலிகை மருத்துவக்கேணி ஒல்லாந்தராட்சிக் காலப்பரப்பிலே இலங்கையில் உருவாகிய மரபுரிமைச் சின்னங்களிலே நெடுந்தீவைத் தவிர வேறெங்கும் காணமுடியாத அல்லது நெடுந்தீவிற்குச் சிறப்புச் சேர்க்கும் வகையிலே அமைந்துள்ள மரபுரிமைச் சின்னமாக இம் மருத்துவக்கேணி காணப்படுகின்றது. நெடுந்தீவு கிழக்குப் பகுதியிலே குதிரைகளின் செறிவுமிக்க காட்டுப்பகுதியில் இக்கேணி அமைந்துள்ளமையானது இது குதிரைகளுக்கு சிகிச்சையளிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது.



# என் இதயம் எழுதும் சொல்




ஆராதனாவை அன்னையை காண்பிப்பதாக ஏமாற்றிக் கூட்டி வந்துள்ளாள் என்பதை நொடியில் புரிந்து கொண்ட சிறுவனின் மனதில் அச்சிறுமி மீதான பரிதாபம் ஏறிக்கொண்டே சென்றது. தான் இல்லவிடினும் அந்தச் சிறுமியை ஆவது காப்பாற்றி விட வேண்டும் என்று ஒரு உறுதி அவன் மனதில் எழுந்தது.

ஆராதனாவையும் ஷ்யாம் அருகே அமர செய்தவள்

”குழந்தைகளா! உங்க அப்பா இப்போது வந்துடுவார். எனக்கு குழந்தை இல்லை என்று தானே என்னை விட்டுட்டு போனார். இப்போ நீங்க ரெண்டு பேர் இருக்கீங்க. கட்டாயம் வந்துடுவார்”

என்று கூறி விகாரமாக சிரிக்கவும் மருண்டு போன சிறுபெண் அழுதபடி ஷ்யாமை ஒட்டியவாறு அமர்ந்தாள். அவளைக் காப்பது தன்னுடைய கடமை என்பது போல அவனும் அவளை தனது பிஞ்சுக்கரங்களால் சுற்றி வளைத்துக் கொண்டான். அந்த வேளை அவனுக்கு புரிந்தது ஒன்றே ஒன்று தான் தங்கள் இருவரையும் கட்டி வைத்து இருப்பவள் ஒரு மனநிலை சரியில்லாதவள்.

அவளை அவள் வழியில் தான் சென்று மடக்கவேண்டும் என்று எண்ணிய சிறுவன்
”அம்மா! எனக்கு பசிக்குது. அப்பா வந்தா நீங்க சாப்பாடு தரல என்று சொல்லிடுவேன்”
என்று கூறவும் முகம் வெளிற அவனைப் பார்த்த அந்தப் பெண்

”இல்லை..இல்லை.. அப்பா என்னை விட்டு திரும்ப போடுவார். இதோ உங்களுக்கு சாப்பாடு எடுத்துட்டு வாரேன்” என்று எங்கோ ஓடி சென்றாள்.

அந்த இடை வேளையில் மெல்ல திரும்பி தன் கைகளுக்குள் மருண்ட பார்வையுடன் இருந்த ஆராதனாவை பார்த்த ஷ்யாம் ”நம்ம போய்டலாம். பயப்பிடாத” என்று அவளை சமாதானப் படுத்தியபடி இருந்தான். அவளும் தலையை ஆட்டி ஆட்டி அழுதவாறே உறங்கிப் போக அவளை அணைத்தவாறே ஷ்யாமும் உறங்கிப் போனான்.

”வீல் வீல்! என்று சத்தம் கேட்கவே திடுக்கிட்டு விழித்த ஷ்யாம் தன்னருகில் கத்திக்கொண்டு இருந்த ஆராதனாவை கண்டு

”ஹேய்! என்ன? என்ன?” என்று அவள் அருகே கட்டப்பட்ட கால்களை வலியுடன் இழுத்து இழுத்து சென்று கேட்கவும் அச்சிறுமியோ பயந்தவாறே சிலந்தி ஒன்றைக் காட்டினாள்.

”சிலந்தி என்றால் உனக்கு பயமா?” என்று மெல்லிய குரலில் வினவிய ஷ்யாம் ”பயப்பிடாத! சிலந்தியை பாக்கிறப்போ ஷ்யாம் ஷ்யாம் சொன்னா அது ஓடி போஇடும்”

”ஷ்யாம் சொன்னா ஓடி போடுமா?” என்று தன் முட்டைக்கண்களை விரித்து கேட்டவளைப் பார்க்க அந்த நிலையிலும் ஷ்யாமிற்கு சிரிப்பு வந்தது.

”ஆமா ஏன்னா அது என்னோட பெயராச்சே!” என்று ஷ்யாம் கூறவும் கிளுகிளுத்துச் சிரித்தாள் அக்குட்டிப்பெண்.



பின்னர் மீண்டும் இருவரும் ஏதேதோ மழலைக்கதைகளை பேசியபடியே உறங்கிப்போக திடுக்கிட்டு கண்களை விழித்த ஷ்யாமிற்கு தங்களை கடத்தி வந்த பெண் கத்தி ஒன்றுடன் ஆராதனாவை நெருங்குவது படவே "அம்மா" என்று அழைத்து அவளை திசை திருப்ப முயன்றான்.

"ஷ்ஷ்.."என்று விரல்களை வாய்க்கு அருகில் வைத்து பேசாதே என்று காட்டியவள்

"பாப்பா தூங்குறா பாரு. தூக்கத்திலயே செத்தா வலி இருக்காது என்று கூறிவிட்டு மீண்டும் ஆராதனாவை நெருங்கினாள். நடக்கப்போகும் அனர்த்தம் புரிய விழிகளை மறைத்த கண்ணீரை இமைதட்டி அடக்கியவன்

"அம்மா! அப்பா வரலயா அம்மா" என்று கேட்கவும் கத்தியோடு ஆராதனாவை நெருங்கிக் கொண்டவள் பட்டென்று நின்றாள். மீண்டும் ஷ்யாமை நெருங்கி

"அப்பாவா! அவன் அயோக்கியன். என்னைத் தேடி வரவே மாட்டான். நான் சாகப்போறேன்! நான் போய்ட்டா நீங்களும் தனியா போய்டுவீங்க! அதான் உங்களை கொலை பண்ணி உங்களையும் கூட்டிட்டு போக போறேன்" என்று அவள் கத்தவும் எதுவுமே புரியவில்லை அச்சிறுவனுக்கு.



"அப்பா வருவாங்க! நீங்க சாகாதீங்க அம்மா! அவர் வரல என்டாலும் நாங்க இருக்கோம்"

"இல்ல! இல்ல!" என்று வெறிபிடித்தவள் போல் கத்தியவள் ஷ்யாம் பார்க்கத்தக்கவாறே தூக்கில் தொங்கினாள்.

கண்முன்னே ஒரு சாவை அந்த வயதில் பார்க்கக்கிடைத்து என்ன செய்வதென்றே அறியாமல் விக்கித்து ஷ்யாம் நின்றது ஒரு சில நிமிடங்களே. ஆராதனாவிடம் அசைவு தென்படவும் அவள் இந்த கொடூரத்தை பார்க்கும் முன்னர் எங்காவது அழைத்துச் சென்றிட வேண்டும் என்று கட்டப்பட்ட கால்களையும் பொருட்படுத்தாது பயத்தில் கண்களை மூடி நிலத்தில் இழுபட்டு சென்றவாறே அந்தப்பெண் எறிந்திருந்த கத்தியைக் கைப்பற்றி தன் காலில் கட்டிப்பட்டு இருந்த கயிற்றை அகற்றினான். பின்னர் சென்று ஆராதனாவை எழுப்பியவன்

"ஆராதனா! நாங்க இப்போ வெளிய போக போறோம். ஆனா நீ நான் சொல்லும் மட்டும் கண்ணை திறக்கவே கூடாது என்று சொல்லி அவளை அழைத்துக்கொண்டு அவள் கூறிய இடத்தில் அவளை விட்டான். செல்ல முன்னம் விழிகளை கசக்கியவாறே

"ஷ்யாம் அண்ணா! என்னை விட்டுட்டு போறீங்களா?" என்று கேட்கவும் சிரித்தபடியே அவள் அருகில் வந்தவன் "நீ நல்லா படிச்சு வளர்ந்ததும் நானே உன்னை தேடி வருவேன்" என்று வீட்டை நோக்கி ஓடியே போனான்.

அவன் வந்ததை அறிந்து அவன் பெற்றோர்கள் ஆனந்தமடைந்து ஆதி அவனை அணைத்து மன்னிப்பு கேட்டு என்று நன்றாகவே சென்றது ஆதி அந்த இடத்திற்கு செல்லும் வரை.

முடிச்சுக்கள் அவிழும்...

அக்னி

# யுவராஜ் சிங் எனும் யுக வீரன்



*2017 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக புறக்கணிக்கபட்டு வந்த யுவராஜ் சிங் 2018 முழுவதும் எந்த ஒரு போட்டித் தொடருக்குமான இந்திய அணியிலும் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இறுதியில் 2019 ஜீன் மாதம் 10 ஆம் திகதி கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். அத்தோடு BCCI என அழைக்கப்படும் இந்திய கிரிக்கெட் சபையின் ஒப்பந்தங்கள், கட்டுப்பாடுகள் முழுவதிலும் இருந்து நீங்கி கனடாவில் இடம்பெறுகின்ற Global T-20 Canada தொடரில் விளையாடினார். இதுவே*



*தற்போது ஐக்கிய அரபு ராட்சியத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் 2020 ம் ஆண்டுக்கான ஐ.பி. எல் தொடரில் ஓய்விலிருந்து விடுபட்டு மீண்டும் பஞ்சாப் அணிக்காக பங்கேற்க விருப்பம் தெரிவித்த யுவராஜ் சிங் இன் ஆசைக்கு முட்டுக்கட்டையாக அமைந்தது.*

*சர்வதேச கிரிக்கெட் அரங்கில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட ஒருநாள் மற்றும் T-20 ஆட்டங்களில் யுவராஜ் சிங் அசைக்க முடியாத ஒரு நட்சத்திரமாக தனது பெயரை பதித்து விட்டே ஓய்வு பெற்றார் என்றாலும் மறுப்பதற்கில்லை.*

***2008-2010- பஞ்சாப்***
***2011- புனே***
***2012-2013- பங்கேற்கவில்லை***
***2014- பெங்களூர்***
***2015-டெல்லி***
***2016-2017- சன் ரைசர்ஸ்***
***2018- பஞ்சாப்***
***2019- மும்பை***

*சர்வதேச போட்டிகள் கடந்து உள்ளூர் தொடர்களில் யுவராஜ் சிங் இன் பெறுபேறுகள் பற்றி பார்க்கலாம். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இந்திய வீரர்களை ஏனைய நாட்டு உள்ளூர் தொடர்களில் பங்கெடுக்க அனுமதி அளிப்பதில்லை. எனவே யுவராஜ் சிங் இன் உள்ளூர் ஆட்டங்கள் ஐ.பி.எல் ஆட்டங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டது.*

*2008 ஆம் ஆண்டு முதலாவது ஐ. பி. எல் தொடர் ஆரம்பிக்கப்பட்ட போது ஒவ்வொரு அணிகளும் தமது உள்ளூர் வீரர்களை தமது அணிக்குள் உள்வாங்க ஏலத்தில் ஆர்வம் காட்டின. அதாவது ஒவ்வொரு அணிக்குமான அடையாளமான வீரராக அந்த வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மும்பை இந்தியன்ஸ் அணி சச்சின் டெண்டுல்கர்,*



*டெல்லி அணி சேவாக், கொல்கத்தா அணி கங்குலி என்ற வரிசையில் பஞ்சாப் அணி யுவராஜ் சிங் ஐ ஏலத்தில் வாங்கியது. அத்தோடு அணித்தலைவராகவும் அறிவிக்கப்பட்டார். முதல் இரண்டு தொடர்களிலும் பஞ்சாப் அணியும் சோபிக்கவில்லை. ஆனாலும் 2009 இந்தியாவில் தேர்தல் காரணமாக தென்னாபிரிக்காவில் நடைபெற்ற இரண்டாவது தொடரில் இரண்டு Hat-trick*

விக்கெட்களை வீழ்த்தினார் யுவராஜ். அந்த இரண்டு பெறுதிகளும் பெங்களூர் மற்றும் டெக்கான் சார்ஜர்ஸ் (சன் ரைசர்ஸ் ஹைதராபாத்) அணிகளுக்கு எதிராக பெறப்பட்டவை. முதலிரண்டு தொடர்களிலும் பஞ்சாப் அணியின் மோசமான பெறுபேறுகள் யுவராஜ் சிங் ஐ அணித்தலைவர் பொறுப்பில் இருந்து நீக்க காரணமாகியது. 2010 ஆம் ஆண்டு நடந்த மூன்றாவது தொடரில் குமார் சங்கக்கார பஞ்சாப் அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார். அந்த தொடரிலும் பஞ்சாப் அணிக்கு புள்ளிப்பட்டியலில் இறுதி இடமே கிடைத்தது. அத்தோடு பஞ்சாப் அணி யுவராஜ் சிங் ஐ அணியில் இருந்து விடுவித்தது.




2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற நான்காவது தொடரில் பத்து அணிகள் பங்கேற்றன. இதில் புதிதாக புனே வாரியர்ஸ் மற்றும் கொச்சி அணிகள் பங்கேற்றன. இதில் புனே அணி யுவராஜ் சிங் ஐ ஏலத்தில் வாங்கியதுடன் அணித்தலைவராகவும் அறிவித்தது. அந்த தொடரில் யுவராஜ் இன் துடுப்பாட்ட பெறுபேறுகள் சிறப்பாக இருந்தன. 14 போட்டகளில் மூன்று அரைச்சதங்கள் உள்ளடங்கலாக 343 ஓட்டங்களை குவித்தார். ஆனாலும் புனே அணிக்கு புள்ளிப்பட்டியலில் ஒன்பதாவது இடமே கிடைத்தது. 2011 இல் புற்றுநோயால் அவதிப்பட்ட யுவராஜ் 2012,2013 இரண்டு ஆண்டுகள் தொடரில் பங்கெடுக்கவில்லை. மீண்டும் 2014 இல் களமிறங்கிய யுவராஜ் சிங் ஐ பெங்களூர் அணி 14 கோடிக்கு வாங்கியது. ஆனாலும் யுவராஜ் சொல்லிக்கொள்ளும்



படியாக பிரகாசிக்கவில்லை. பெங்களூர் நிர்வாகம் அந்த வருடத்தோடு மட்டும் ஒப்பந்தத்தை முடிவு செய்து யுவராஜ் ஐ அணியில் இருந்து கழட்டி விட்டது.

மீண்டும் 2015 இல் புதிய ஏலம். டெல்லி அணி 16 கோடிக்கு யுவராஜ் சிங் ஐ வாங்கியது. 2008-2015 வரையான ஏலத்தின் அடிப்படையில் ஒரு வீரருக்கு அளிக்கப்பட்ட அதி கூடிய ஏலத்தொகையாக அது அமைந்தது. அவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்ட யுவராஜ் சிங் மீண்டும் கை விட்டார். பலன் அந்த வருடத்தோடு டெல்லி அணியும் கை விட்டது. மீண்டும் 2016 இல் புதிய அணி, சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 7 கோடிக்கு யுவராஜ் சிங் ஐ வாங்கியது. ஒப்பீட்டளவில் அது ஒரு சிறந்த தொடராக அமைந்தது. காரணம் சன் ரைசர்ஸ் அணி அந்த வருடத்தின் சம்பியன்கள் ஆகின. இறுதிப்போட்டியில் 23 பந்துகளில் 38 ஓட்டங்களை குவித்து யுவராஜ் சிங் வெற்றிக்கு பங்களித்தார். அத்தோடு 2017 ஆம் ஆண்டுக்கான அணியில் சன் ரைசர்ஸ் நிர்வாகம் யுவராஜ் சிங் ஐ அணியில் தக்கவைத்துக்கொண்டது. ஆனாலும் அந்த தொடரில் யுவராஜ் சொதப்ப அந்த வருடத்தோடு அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார்.



2018 ஆம் ஆண்டு மீண்டும் பஞ்சாப் அணி யுவராஜ் சிங் ஐ அடிப்படை விலையான 2 கோடிக்கு வாங்கியது. ஆனாலும் யுவராஜ் 7 போட்டிகளில் மொத்தமாக 64 ஓட்டங்களை குவிக்க வெளியில் உட்கார வைக்கப்பட்டார். அத்தோடு அந்த வருடத்தோடு மீண்டும் பஞ்சாப் அணி யுவராஜ் சிங் ஐ கைவிட்டது. 2019 ஆம் ஆண்டு மும்பை அணி அடிப்படை விலையான ஒரு கோடி ரூபாய்க்கு யுவராஜ் ஐ வாங்கியது. ஆனாலும் பலமான துடுப்பாட்ட வரிசையை கொண்டிருந்த மும்பை அணி பெரும்பாலான போட்டிகளில் யுவராஜ் சிங் ஐ ஆடும் பதினொருவர் அணியில் சேர்த்துக்கொள்ளவே இல்லை.

இப்படியாக ஆறு வெவ்வேறு அணிகளுக்காக ஆடி இருக்கிறார் யுவராஜ். முன்னணி வீரர் ஒருவரை அணிகள் தக்க வைக்காமல் இருப்பது அந்த வீரரின் பெறுபேறுகளை காட்டாமல் இல்லை. ஆம், ஒட்டுமொத்தமாக பார்த்தால் யுவராஜ் சிங் சிறப்பான ஒரு ஐ.பி.எல் வரலாற்றை கொண்டிருக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.







ஆனாலும் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் யுவராஜ் சிங் கொண்டாடப்பட வேண்டியவரே. அதற்கு ஏற்றாற்போல 2012 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் "அர்ஜீனா" விருது வழங்கி கௌரவித்தது. 2014 இல் "பத்ம ஸ்ரீ" விருதும் கிடைத்தது. இந்த விருதுகளை காட்டிலும் யுவராஜ் சிங் நிரந்தரமாக ஆடிய 4 ஆம் இலக்கத்தில் இன்னும் ஒரு நிரந்தரமான துடுப்பாட்டக்காரரை கண்டுபிடிக்க முடியாமல் இந்திய அணி திணறி வருவதை விடவா பெரிய விருது இருந்து விட போகிறது.

ஆம் அவன் ஒரு போராட்டக்குணம் கொண்ட செயல் வீரன். ஆடிய காலங்களில் இந்தியாவின் அனைத்து கப்டன்களுக்குமான "கட்டப்பா" இவனே. எந்த எதிரியும் இவனது துடுப்புக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும். மீண்டும் இதே போன்ற போராட்டக்குணம் கொண்ட வீரன் இந்தியாவின் கைகளிற்கு கிடைக்க சில காலம் ஆகலாம். ஆனால் இவன் அன்றும் போற்றப்படுவான்.....

அடுத்த இதழில்...

## "கத்துக்குட்டிகளில் இருந்து கர்ஜிக்கும் சிங்கங்களான இலங்கை-1996 உலகக்கிண்ணம்"

ஒரு கண்ணோட்டம்